பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 16 ஞாயிற்றுக்கிழமை (29.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 153

# கொழும்பில் இன்று அதிகாலையும் இடைவிடாக் குண்டுச் சத்தங்கள்! மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்பட்டு வான் எதிர்ப்புத் தாக்குதல்கள்!!

பிந்திய செய்தி

கொழும்பு,ஏப்ரல் 29

கொழும்பையும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் இன்று விடிகாலை 1.30 மணியளவில் மின்சாரம் நிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல இடங்களிலும் குண்டுச்சத்தங்கள் பேரிடியாகக் கேட்டன. கடந்த வியாழக்கிழமைபோன்று இனந் தெரியாத விமானங்கள் வந்துவிட்டதாக நினைத்து தற்காப்பு நடவடிக்கையாக வான் எதிர்ப்புத் தாக்கு தல்கள் பல இடங்களிலும் நடத்தப்பட்டன. அதனால் எங்கும் குண்டுச் சத்தங்கள் இடியோசை போன்று தொடர்ந்து அமளி யாகக் கேட்டுக் கொண்டிருந்தன.

சுமார் 30 நிமிட நேரமாக இடைவெளி இன்றி நாலா பக்கங்களி லும் பேரிடியான சத்தங்கள் கேட்டதால் என்ன செய்வதென்று அறி யாது திகிலடைந்து போயினர். மின்சாரம் மீண்டும் அதிகாலை 2.30 மணிக்கு வந்த பின்னரும் மக்களுடைய பதற்றம் தணியவில்லை.

அம்புலன்ஸ் வண்டிகளும் தீயணைப்பு வண்டிகளும் அங்கு மிங்குமாக ஓடித்திரிந்ததால் எதுவும் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் மக்கள் பதற்றத்துடன் கண் விழித்திருந்தனர்.

மீண்டும் அதிகாலை 3 மணிக்கு மின்சாரம் நிறுத்தப்பட்டது. செய்தி அச்சுக்குப் போகும்வரை (3.30 மணி) வரை மின்சாரம் மீள வழங்கப்படவில்லை. நாலா திசை களிலும் லேசர் குண்டுகள் ஏவப்படும் சத்தம் சகல பகுதிகளையும் மீண்டும் மீண்டும் அதிரவைத்துகொண்டிருந்தன.

கொழும்பில் தாக்குதல் நடத்தும் நோக்குடன் சந்தேகத்துக்குரிய விமானம் வருவ தாகத் தகவல் கிடைத்ததை அடுத்து முக்கிய கேந்திர நிலையங்களின் தற்காப்புத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பு இராணுவத் தலைமையம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, இரத்மலானை விமான நிலையம், கொழும்பு துறைமுகம், களனி திஸ்ஸ மின் உற் பத்தி நிலையம், கொழும்பு துறைமுகப் பகுதிகளில் இருந்து தற்பாது காப்புக்காக லேசர் குண்டுகள் தீர்க்கப்பட்டன.

**கிளிநொச்சியில் கிபிர் தாக்குதல்**

கொழும்பில் தற்காப்புத் தாக்குதல்கள் நடந்து 15 நிமிட நேரத்தில் கிளிநொச்சியில் இரணைமடுப் பகுதியில் கிபிர் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரியவந்தது.

விடுதலைப் புலிகளின் விமான ஓடு தளத்தை இலக்குவைத்து இத்தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் எனக் கூறப்பட்டது.

விசுவமடுப் பகுதியில் இன்று அதிகாலை 1.15 மணியளவில் 'கிபிர்' விமானங்கள் 8 குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியதாக ஒரு தகவல் தெரி வித்தது.

இதேவேளை, சந்தேகத்துக்கிடமான விமானங்களை விமானப்படையின் எம்.ஐ. 24 ஹெலிக்கொப்டர் புத்தளம் பகுதியில் கலைத்துச் சென்றதாக ஊர்ஜிதப் படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவித்தது. (அ-1)

# மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள்

# ஐ.தே.க. தீர்வு யோசனையின் அடிப்படை இதுவாம்!

## வடக்கு - கிழக்கை குறிப்பிட்ட காலத்துக்கு மீள இணைக்கவும் எதிர்க்கட்சி ஆதரவு

கொழும்பு,ஏப்ரல் 29

**இப்போதுள்ள மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி, அதிகாரப் பகிர்வுடனான ஆட்சிமுறையை வலுப்படுத்துவதே ஐக்கிய தேசியக் கட்சியின் இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனையின் அடிப்படையாக இருக்கும்.**

இப்போதுள்ள மாகாண சபைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தில்லை. வடக்கு - கிழக்கை குறிப்பிட்ட காலத்துக்கு இணைத்து புதிய ஆட்சிமுறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட சில ஆண்டுகளின் பின்னர், வேண்டுமானால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தலாம் என் பதும் ஐக்கிய தேசியக் கட்சியின் யோச னைகளில் முக்கிய அம்சம்.

இத்தகவல்களைத் தெரிவித்திருப்பவர் அரசமைப்பு விவகார நிபுணரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னருமான கே.என்.சொக்ஸி.

ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தேச அர சியல் தீர்வு அதிகாரப் பகிர்வு ஆகியன சம் பந்தமாக அவர் வெளியிட்டிருக்கும் சில தரவுகள் வருமாறு-

★ மாகாண சபைகளுக்கான கூடுதல்

(08ஆம் பக்கம் பார்க்க)

### காலை நேர விசேட செய்தி

# எண்ணெய்க் குதங்கள் மீது வான் புலிகள் தாக்குதல்!

கொலன்னாவை, முத்துராஜவெல எரி பொருள்குதங்கள் மீது முறையே இன்று விடி காலை 1.50 மணிக்கும் 2.05 மணிக்கும் வான் புலிகள் தாக்குதல் நடத்தியதாக விடு தலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்தார்.

இன்று விடிகாலை 1.20 மணியளவில் வன் னியில் கிபிர் விமானங்கள் தாக்குதல் நடத் திய பின்னரே மேற்படி இரண்டு தாக்குதல் களும் நடத்தப்பட்ட தாக அவர் தெரிவித்தார்.

வான் புலிகளின் விமானங்கள் தாக்குதல் களை நடத்திவிட்டு பத்திரமாகத் திரும்பிய தா கவும் செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்கு அவர் கூறினார்.

விமானங்களுக்கான எரிபொருள்கள் இவ் விரு எண்ணெய்க் குதங்களிலும் களஞ்சியப் படுத்தி வைக்கப்படுவதுண்டு.

இரண்டு எரிபொருள் குதங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.(அ-1)

# யாழ்.பல்கலைக்கு புதிய துணைவேந்தர் தெரிவு; விண்ணப்பம் கோருவதற்குப் பேரவை முடிவு

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தர் ஒருவரை நியமிப்பதற்கு விண்ணப்பங்களை கோருவதென பல் கலைக்கழகப் பேரவை நேற்று முடிவு செய் துள்ளது.

பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்து விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் பெற்று அடுத்தகூட்டத்தில் இது தொடர்பாக முடிவு செய்யப்படும் என்று அறியவந்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளரின் பணிப் புரையின் பேரில் பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழு, புதிய துணைவேந் தரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக பதிவாளரைக் கோரியி ருந்தது.

இது தொடர்பாக நேற்று நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (அ-1)

# குடாக்கடலில் தொழில் செய்த மீனவர் ஷெல் தாக்குதலில் நேற்று கொலையுண்டார்

## புலிகளே அத்தாக்குதலை நடத்தியதாக படைத்தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29

குடாக்கடலில் நேற்று முற்பகல் 10.15 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் ஒன் றில், பாஷையூரைச் சேர்ந்த இராயப்பு யோசப் (வயது 58) என்பவர் உயிரிழந் தார்.

சுமார் பத்து நாள்களாகக் குடாக்கடலில் பாஷையூர், குருநகர், கொழும்புத்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் தொழில் செய்ய அனுமதிக்கப்படவில்லை.

நேற்று அப்பகுதிகளைச் சேர்ந்த 175 பேர் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டி ருந்தனர். அவர்கள் தொழில் செய்து கொண் டிருந்த கடற்பரப்பில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்ததாலேயே மேற்சொன்ன மீனவர் உயிரிழந்தார் என்று அறிய வருகிறது.

அவரது சடலம் யாழ்.போதனா வைத் தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டது. யாழ்.மேலதிக நீதிவான் திருமதி.சறோ ஜினி இளங்கோவன் மரண விசாரணை நடத்தி சடலத்தை உறவினரிடம் ஒப்ப டைக்குமாறு உத்தரவிட்டார். கொலை யுண்டவர் மூன்று பிள்ளைகளின் தந்தை

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஆஸ்திரேலியா அபார ஆட்டம் 281 ஓட்டங்களைப் பெற்றது

## சனத் ஜெயசூரிய 63 ஓட்டங்களைப் பெற்றார்

பார்ப்படோஸ், ஏப்.29

மேற்கிந்தியத்தீவில் இடம்பெற்ற உலகக்கிண்ணத்துக்கான இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலியா அணி 4விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பில் முதலில் களம் இறங்கிய சனத்ஜெயசூரிய 13ஆவது ஓவ ரில் 63 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.




முதலில் துடுப்பெடுத் தாடிய ஆஸ்திரேலிய அணி 38 ஓவர்கள் முடிவில் 4விக் கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது. ஆஸ்திரேலிய அணி வீரர் கில்கிறிஸ்ட் 149 ஓட்டங் ளைப் பெற்றார். தொடர்ந்து ஆடிய இலங்கை அணி செய்தி அச்சுக்குப் போகும் வரை (4.00 மணி வரை ) 33 ஓவர்களில் 7 விக்கெட்டுக் களை இழந்து 206 ஓட்டங் களைப் பெற்றது.

இலங்கை நேரப்படி ஆட்டம் எட்டுமணிக்கு ஆரம்பமாகவிருந்தது. எனினும் மழை காரணமாக இரவு 10 மணிக்கே ஆட்டம் ஆரம்பமானது.

50 ஓவர்கள் கொண்ட ஆட்டம் 38 ஓவர்களாகக் குறைக்கப்பட்டிருந்தது. இலங்கை அணி ஆடிக்கொண்டிருந்தபோது மழை குறுக்கிட்ட தால் ஆட்டம் இலங்கை நேரப்படி 2.50 மணிக்கு நிறுத்தப்பட்டு மீண்டும் 10 நிமிடங்களில் ஆட்டம் ஆரம்பமானது.

ஆட்டத்தைப் பார்ப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பல அமைச்சர்க ளும் சென்றிருந்தனர்.

ஆட்டத்தைக் காண பல்வேறு நாடுகளிலும் இருந்து லட்சத்துக்கும் மேற்பட்ட ரசி கர்கள் அங்கு கூடியிருந்தனர். (அ-1-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7ஆவது பிறந்த நாள் வாழ்த்து



குருநகரைச் சேர்ந்த
அன்ரனி யூலியற்
தம்பதியரின் செல்வப் புதல்வி
**மரிய சைனா**
தனது 7ஆவது பிறந்த நாளை இன்று
(29.04.2007) ஞாயிற்றுக்கிழமை
சுவிஸில் உள்ள தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக்
கொண்டாடுகின்றார்.
அனைவரும் இவரை மாதாவின்
அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றார்கள்.

*வாழ்த்துவோர்:*
அப்பா, அம்மா, தம்பி (சுவிஸ்), மாமாமார், மாமிமார், பெரியம்மாக்கள், பெரியப்பா, அண்ணாமார், அக்காமார், சித்தி, சித்தப்பாமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உறவினர், நண்பர்கள்.

செல்வி **மரிய சைனா**
29.04.2007

மயூரன் (அண்ணன்).

## கல்விசார் போட்டிகள்

குருநகர் சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் குருநகரைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களிடையே இன்று ஞாயிற்றுக்கிழமை கல்வி சார்ந்த போட்டிகளை நடத்த உள்ளது.

இன்று மு.ப. 10 மணிக்கு குருநகர் புனித கார்மேல் மாதா மண்டபத்தில் இப் போட்டிகள் நடைபெற உள்ளன. (203 -51)

## அநுராதபுரத்தில் நால்வர் கைது

அநுராதபுரம் நகரின் முக்கியமான இடங்கள் குறித்து தகவல் சேகரிக்கச் சென்ற நால்வர் விடுதலைப்புலிகளின் உறுப்பினர் என்ற சந்தேகத்தில் ஜெயந்தி மாவத்தையில் வைத்து நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிடுவதற்காக அந்த நால்வரும் சென்றனர் என்றும் இவர்களில் வாழைச்சேனையைச் சேர்ந்த தமிழர்கள் இருவரும் திருகோணமலையைச் சேர்ந்த பறங்கியரும் முஸ்லிமும் என்றும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.


**நாகம்ஸ் சினிமா**
*கன்னாகம்*
நல நாதகால இடைவெளியின் பின்

விஜய், அசின், வடிவேல் நடித்த
**போக்கிரி**
(நீல்ஸ்)
தினசரி : 11மணி, 3மணி.



# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

S.K ஸ்தாபனத்தின் இன்னும் ஒரு சேவையாக நாளை (30.04.2007)
திங்கட்கிழமை காலை 09.08 தொடக்கம் 10.22 மணிவரையுள்ள
சுபமுகூர்த்த வேளையில்

**S.K. Restaurant**
(Vegetarian)
(இல. 219, கண்டி வீதி, சாவகச்சேரி)

என்னும் நிறுவனத்தை மங்களகரமாக ஆரம்பித்து வைக்கவுள்ளோம்
அத்தருணம் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

T.P.: 0776532186
0776245134.
(60160)

உரிமையாளர்
S.K ஸ்தாபனத்தார்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பையா பராசக்தி (சீதப்பிள்ளை)



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா பராசக்தி (சீதப்பிள்ளை) 26.04.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா (ஓய்வுபெற்ற தபால் ஊழியர், வேலணை அஞ்சல் அலுவலகம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னாச்சி தம்பதியரின் மருமகளும் அன்னலட்சுமி, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கேதாரநாதன், யோகநாதன், நாகேந்திரன், பகவதிதேவி, இராஜேந்திரன் ஆகியோரின் அன்புத்தாயும் குகபாலசுந்தரி, பூமணி, வாசுகி, ரவிபாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.*
(60152)

தகவல்:
யோகநாதன் (மகன்),
ரவிபாலச்சந்திரன் (மருமகன்).

## செல்லையா சின்னத்துரை

பலாலியைப் பிறப்பிடமாகவும் சரசாலையை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சின்னத்துரை நேற்று (28.04.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், மலிகாவதியின் அன்புக் கணவரும் செல்வமயூரன், தயாரதி, தயாவேணி, கீதாயினி, கிருபாலினி, சிவவாணி, சிவவதனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வல்லிபுரம், கந்தையா, அம்பிகாதேவி ஆகியோரின் அருமைச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரசாலை தெற்கு,*
*சாவகச்சேரி.*
(60164)

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி பூலோகசிங்கம் இராசலட்சுமி



வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் வட்டுவினி ஒழுங்கை இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூலோகசிங்கம் இராசலட்சுமி நேற்று (28.04.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ் சென்ற பூலோகசிங்கத்தின் (சிறைச்சாலை பரிசோதகர்) அன்பு மனைவியும் திருஞானசம்பந்தமூர்த்தி (U.K), கனகாம்பிகை (கனடா), சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), குருமூர்த்தி (ஓய்வுபெற்ற பொறியியலாளர் - C.T.B. கோண்டாவில்), நகுலாம்பிகை ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற லோகராஜா மற்றும் லோகராணி, லோகநாதன் (இ.போ.ச பொறிவலர், கோண்டாவில்), அகிலலோகநாயகம் (ஆசிரியர், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை), லோகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் (ஆசிரியர்) மற்றும் இந்திராணி, புஸ்பவதி (ஆசிரியர் மகாஜனக் கல்லூரி), சுபாஜினி தேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் செல்வபாக்கியம், சரஸ்வதி, பாலசுந்தரம் (இளைப்பாறிய அதிபர் யா/ யூனியன் கல்லூரி), சிவராசலிங்கம் (உணவுக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்) தவலோகநாயகி (இளைப்பாறிய ஆசிரியர் அருணோதயக்கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும் புஸ்பகுமார் (இ.போ.ச.), ரம்யா, ரதிபனா, வித்தகி, சிம்மகி, தர்ஷனா, தனோஜன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2007) நண்பகல் 11 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
(60154)

தகவல்: அகிலலோகநாயகம் (மகன்),
லோகநாதன் (மகன்).

## பொன்னுத்துரை தெய்வானைப்பிள்ளை

**(நெடுந்தீவு, யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை)**



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை வதிவிடமாகவும் ஈச்சமோட்டை தெய்வானை ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் தற்பொழுது கனடாவில் வசித்துவந்தவருமாகிய திருமதி பொன்னுத்துரை தெய்வானைப்பிள்ளை 26.04.2007 வியாழக்கிழமை கனடாவில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சோமு பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சோமர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சபேசன், சறோஜா, விமலா, மகேசன், வனிதா, விஜயா ஆகியோரின் பாசமிகு தாயும் யசோதரா, பேரின்பநாதன், ரஞ்சி, இராசலிங்கம், சுபேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர்கள் ஆறுமுகம், சின்னத்துரை (சின்னத்துரை அன் சன்ஸ் - யாழ்ப்பாணம்), சின்னம்மா மற்றும் சோமசுந்தரம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் இலட்சுமி, கண்மணி, காலஞ்சென்ற ஏகாம்பரம், சின்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் அமர்நாத், விவேக், மீரா, அர்ச்சுனா, லக்ஸ்மன், தாரணி, ஜனகன், அனுஷன், ஜதுஷன், ஜெனாத்தன், தனுஷன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் **Scott Funeral Home, 420 Dundas Street East, Mississauga (Dundas & Cawthra)** இல் நேற்று (28.04.2007) சனிக்கிழமை பி.ப.5மணி தொடக்கம் 9மணி வரையும் இன்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5மணி தொடக்கம் 9மணி வரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை (30.04.2007) திங்கட்கிழமை மு.ப.9.30 - 12.30 வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று **(737, Dundas st. East, St.John's Crematorium)** தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு :*
**சபேசன் : 9058407541 / 6472987541.**
**பேரின்பம் : 9057947106/4165548290,**
**இராசலிங்கம் : 6472091125,**
**இந்திரன் : 4166597482.**
(60156)

தகவல்:
ஐயாத்துரை சறோஜினிதேவி
(மருமகள்).
முதலாம் வட்டாரம், நெடுந்தீவு.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகரத்தினம் பாலசுப்பிரமணியம்



புலோலி, குரும்பைகட்டியைப் பிறப்பிடமாகவும் பட்டிருப்பு, களுவாஞ்சிக்குடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் பாலசுப்பிரமணியம் கடந்த 25.04.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் களுவாஞ்சிக்குடியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குரும்பைகட்டி,*
*புலோலி.*

தகவல்:
குடும்பத்தினர்.

## கதிரேசு சின்னத்தங்கச்சி



கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு சின்னத்தங்கச்சி நேற்று (28.04.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசுவின் அன்பு மனைவியும் கிருபாகரன் (யாழ். மாநகர சபை வேலைத்தளம்), வனிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் சசிகலா, அருந்தவராசா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் சபேசனா, நிலக்ஷனா, ரேர்ச்சிகா, நிதர்சன், ஜானுஜா ஆகியோரின் பேர்த்தியும் பாக்கியம், கனகம்மா, நடேசு, சின்னத்தம்பி, சண்முகநாதன், தங்கமலர் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*தில்லையம்பதி,*
*கோண்டாவில்.*
(60165)

தகவல்:
க. கிருபாகரன்,
(மகன்- யாழ். மாநகர சபை).

## செல்லப்பா சக்திவேல்



குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் தாவடியையும் திருநெல்வேலியையும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சக்திவேல் 27.04.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா- சௌந்தரம் தம்பதியரின் ஏகபுதல்வனும் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் நல்லம்மா தம்பதியரின் மருமகனும், சக்தீஸ்வரி,தயானி,யனோசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தசிவா,சுதாகர் ஆகியோரின் மாமனும்,நரேந்திரன்,சாம்பவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலிஇந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30/2, சைவப்பாடசாலைஒழுங்கை,*
திருநெல்வேலி, *0776155810*
(60140)

தகவல்:
குடும்பத்தினர்


**பணி வெற்றிடம்**

எமது நல்லூர் பிரிவு நிறுவனத்திற்கு மனையியல் துறையில் ஆர்வமுள்ள நிலையப் பொறுப்பாளர் தேவை சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவும் இதர சலுகைகளும் வழங்கப்படும்.
*நாளை (30.04.2007)* திங்கட்கிழமை பி.ப ஒரு மணிக்கு நேரில் வரவும்.

**தூரிகை**
செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.



**திருமண சேவை**

78ஆம் ஆண்டு, வெளிநாடு சிற்றிசன் மணமகனிற்கு உடன் மணமகள் தேவை. குறிப்பு புகைப்படத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும். (பதிவுக்கட்டணம் இல்லை)

**தூர்க்கா திருமண சேவை,**
**இல.9, சங்கிலியன் வீதி,**
**நல்லூர்.**










Digitized by Noolaham Foundation
noolaham.org

# உலகவங்கி உதவியுடன் வீடமைப்புத்திட்டம்; 3ஆம் கட்டமாக நூறு கிராமங்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.29

உலகவங்கியின் நிதி உதவியுடன் வடக்கு -கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட மைப்புத் திட்டத்தின் கீழ் குடாநாட்டில் மேலும் நூறு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள் ளன.

குடாநாட்டில் 12 பிரதேச செயலர் பிரிவு களிலேயே இக்கிராமங்கள் தெரிவுசெய்யப் பட்டுள்ளன.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 6 கிராமங்களும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 13 கிராமங்களும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 10 கிராமங்களும் ஊர் காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 4 கிராமங்களும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 27 கிராமங்களும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 3 கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 3 கிராமங்களும் சண்டி லிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 17 கிராமங்களும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 4 கிராமங்களும் தென் மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 9 கிரா மங்களும் வேலணை பிரதேச செயலர் பிரிவில் ஒரு கிராமமும் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

இக் கிராமத் தெரிவில் ஏதாவது குறைகள், ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்துமூலம் அறியத்தருமாறு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார். (203)

## தென்மராட்சி வலயத்தில் ஆங்கில பாட வகுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் ஆங்கில பாட மொழிவிருத்திச் செயற் பாடுகள் கல்வி அலுவலகத்தினர் வகுப்பு ரீதி யாக கற்பித்தல் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர்.

ஆங்கில மொழி அபிவிருத்தியை மைய மாக வைத்து பாடசாலைகள் மட்டத்தில் மாணவர்களை ஒன்றிணைத்து இச்செயற் பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தரம் 6,7,8 வகுப்பு மாணவர்களுக்கான வாசிப்புப் பயிற்சிப் பட்டறைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையிலும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நாவற்குழி மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

தரம் 9 வகுப்பு மாணவர்களுக்காக எழுத் துப் பயிற்சிப்பட்றை எதிர்வரும் 5ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீச லை வீர சிங்கம் மகா வித்தியாலயம், கைதடி முத்துக் குமாரசாமி மகா வித்தியாலயம் ஆகியவற் றிலும் நடத்தப்படவுள்ளதாக வலயக் கல் விப் புணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்தார். (202-207)

## வன்னி மீதான விமானத்தாக்குதல் மக்களை வெளியேற்றும் முயற்சியே

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கண்டனம்

கிளிநொச்சி, ஏப் 29

வன்னிப் பெரு நிலப்பரப்பில் ஸ்ரீலங்கா வின் விமானப்படை நடத்தும் தாக்குதலா னது அங்கு வாழும் மக்களை அச்சுறுத்தி வெளியேற்ற முயலும் ஒரு நடவடிக்கை.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் கண்டனம் வெளியிட்டுள்ள னர்.

இது தொடர்பாகக் கூட்டமைப்பு வெளி யிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்களின் மனித உரிமைகளை மீறும் வகையில் மக்களுக்கு அவலத்தையும் துன்பத்தையும் ஏற்படுத்த இந்தத் தாக்குதல் நடத்தப்படுகின்றது.

ஸ்ரீலங்கா அரசின் இந்த நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் மிகவும் தெளிவாகப் புரிந்து கொண்டு அரசின் மீது முழு அளவி லான அழுத்தத்தினைக் கொடுத்து, பொது மக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துவதற் கும் அரசை சமாதான வழிமுறைக்குக் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோருகின்றோம் - என் றுள்ளது.

(1-202)

## தொழில்நுட்ப ஊழியர்களுக்கு செயல் முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்.29

வடக்கு மாகாண திணைக்கள அலுவலங் களில் கடமையாற்றும் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாம், இரண்டாம் திணைக்கள எழுத்து மற்றும் செய்முறைப் பரீட்சைகள் அடுத்த மாதளவில் நடத்தப்பட வுள்ளன.

இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவுள்ள உத்தியோகத்தர்கள் நாளை 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு மாகாணபொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எம்.பி. தெ.து. விஜயலட்சுமி அறிவித்துள் ளார்.

பரீட்சைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படவுள்ளன. (202)

## நன்கொடைபெற இறுதித்தினம்

யாழ்ப்பாணம், ஏப்.29

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட சன சமூக நிலையங்களில் இதுவரை நன்கொடை நிதியைப் பெற்றுக்கொள்ளாத நிலைய நிர் வாகிகள் நாளை திங்கட்கிழமை வங்கிப் புத் தகத்துடன் திட்டமிடற் பிரிவுக்கு வருகை தருமாறு பிரதேச சபைச் செயலாளர் கேட் டுள்ளார்.

குறிப்பிட்ட தினத்துக்குள் வருகை தராத சனசமூக நிலையங்கள் இயங்காதவை எனக் கருதிப் பதிவுகள் இரத்தாவதற்கு உடன் நட வடிக்கை எடுக்கப்படுமெனவும் செயலாளர் தெரிவித்தார். (202)

## ஊடகவியலாளர் 'தராகி' நினைவாக மாணவிக்கு உதவி

வீடு எரிந்ததனால் கற்றல் உபகரணங் கள், சீருடைகள் ஆகியவற்றை இழந்த மீசாலை [illegible]ரசிங்கம் மகா வித்தி[illegible]ாலய மாண விக்கு [illegible] இலங்கைப் பத்திரிகையாளர் சங் கத்தி[illegible] பத்திரிகையாளர் டி.சிவராமின் (தராகி) [illegible]ஆம ஆண்டு நினைவுதினத்தை ஒட்டி ஒரு [illegible]தொகுதி கற்றல் உபகரணங்களையும் சீருடை கொள்வனவு செய்வதற்கு நிதி உத வியையும் வழங்கினர்.

கொடிகாமம் படை முகாமை அண்டிய பகுதியில் உள்ள வீடு கடந்த வாரம் இரவு தீப்பிடித்து எரிந்ததில் வீட்டு உடைமைகள் அனைத்தும முற்றாக எரிந்து சாம்பலாகியது. இதனால் பாதிக்கப்பட்ட தம்பிராசா நியுடிகா என்னும் தரம்-9 மாணவிக்கே இந்த உதவி கள் வழங்கப்பட்டன. (207-203)

## இசை வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஏப்.29

நுணாவில் கிழக்கு, சர்வசாதன சனசமூக நிலையத்தினர் இலவசமாக மிருதங்கம், ஓர்கன் ஆகிய பயிற்சி வகுப்புகளை எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை ஆரம் பிக்கவுள்ளனர்.

இப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்ற விரும்புவோர் நிலையத் தலைவர் க.மோகன ராஜலிங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-207)

## எள் விதைப்பு நவாலியில் வரட்சியால் பெரும் நட்டம்

நவாலி, ஏப். 29

நவாலியில் எள் விதைப்பில் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டில் நல்லெண்ணெய்க்கு ஏற் பட்ட கிராக்கியைத் தொடர்ந்து ஆனைக் கோட்டை, நவாலிப் பிரதேச விவசாயிகள் எள் விதைப்பில் பெரும் ஆர்வத்துடன் ஈடு பட்டனர்.

ஆயினும் தற்போது நிலவி வரும் வரட் சியினாலும் கட்டாக்காலி கால்நடைகளாலும் பெருமளவு பயிர்கள் அழிந்து விட்டன.

இதனால் பெரும் நஷ்டத்தை எதிர்கொள் வதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின் றனர்.

(202-100)

# பல வகையான நெருக்கடிகளை எதிர்நோக்கும் தமிழ் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் பாதுகாப்புத் தொடர்பான அச்சத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட செய்திகளே வெளிவருகின்றன

## சர்வதேச ஊடக நிலையத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் மகஜர்

இலங்கையில் ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் சந்திக்கும் அச்சுறுத்தல்கள், நெருக் கடிகள், நேரடியான தாக்குதல்கள் என்பவற்றை விவரமாக விளக்கி விரிவான கடிதம் ஒன்றை எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வியன்னா வைத் தளமாகக்கொண்டு இயங்கும் சர்வதேச ஊடக நிலையத்துக்கு அனுப்பிவைத்திருக்கிறார்.

'இலங்கையில் தொடர்ந்து அருகி வரும் ஊடக சுதந்திரம்' என்ற தலைப்பில் அமைந்த அந்த அறிக் கையில் சிங்கள, ஆங்கில ஊடகங்கள், ஊடகவிய லாளர்களுக்கு உள்ள அச்சுறுதல்கள் குறித்து முத லாவது இணைப்பையும், தமிழ் ஊடகங்கள், ஊடக வியலாளர்களுக்கு உள்ள அச்சுறுத்தல்கள் குறித்து இரண்டாவது இணைப்பையும் சேர்த்து அனுப் பியுள்ளனர்.

''உதயன்' அதன் சகோதர பத்திரிகையான ''சுடர் ஒளி'' ஆகியன எதிர்கொள்ளும் நெருக்கடி மேற்படி பின் இணைப்பில் விரிவாக தரப்பட்டுள்ளது.

சர்வதேச ஊடக நிலையத்துக்கு அனுப்பப்பட்ட இந்தக் கடிதத்தின் பிரதிகளை ரணில் விக்கிரமசிங்க கடந்த24ஆம்திகதி செவ்வாய்க்கிழமை கொழும் பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

ரணில் கடிதத்தில் 'இணைப்பு - 2' என்ற பிரிவில் தமிழ் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகள் பற்றித் தெரிவிக்கப்பட் டிருப்பவையாவது:-

**தமிழ் ஊடகம், பத்திரிகையாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்**

இலங்கையின் மனித உரிமை மீறல், மனித பாது காப்பு சீர்குலைவதனால் தமிழ் ஊடகமும், தமிழ் பத்திரிகையாளர்களுமே பெரிதும் பாதிக்கப்படு கிறார்கள். ஏதோ ஒரு வகையில் அச்சுறுத்தலுக்கு உள் ளாகும் பெரும்பாலான பத்திரிகையாளர்கள் தமிழர் களாகவே உள்ளனர். தமிழில் பிரசுரிக்கும் அல்லது ஒலிபரப்பும் ஊடக நிறுவனங்களே தாக் கப்பட்டுள்ளன, தீ வைக்கப்பட்டுள்ளன, குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி இருக்கின்றன. வடக்கு, கிழக் கில் வெளிவரும் தமிழ் ஊடகங்கள் இதுவரை கண்டி ராத அச்சுறுத்தலையும், தணிக்கையையும், மிரட் டலையும் முகங்கொடுக்க, கொழும்பில் அமைந் துள்ள சுதந்திரத் தமிழ் ஊடகங்கள் உள்ளடக்கத்திலும், விநியோகத்திலும் கட்டுப்பாடுகளுக்கு முகங் கொடுக்கின்றன. நிலைமை மிகவும் பாரதூரமானது. இப்பாரதூரமான நிலைமை அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும், தமிழ் ஊடகத்தின் பாதுகாப்பை உறுதிசெய்ய எவ்வித நட வடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. தமிழ் ஊடகங்கள் முகங்கொடுக்கும் அனைத்து உத்தி யோக ரீதியான, அல்லது உத்தியோகப் பற்றற்ற கட்டுப் பாடுகளும் இல்லாதொழிக்கப்படவேண்டும் என் றும், தமிழ் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு ஊர் ஜிதம் செய்யப்பட வேண்டும் என்றும் ஊடக அமைப் புகள் அவசர அவசரமாக விதந்து உரைத்துள்ளன.

**1. கிழக்கில் தமிழ்ப் பத்திரிகைகள் மீதான தடை**

கிழக்கில் அரச கட்டுப்பாட்டிலுள்ள திரு கோண மலை நகரில் ஜனவரி 11, 2007 தொடக்கம் இரண்டு பிரபல தமிழ் பத்திரிகைகள் தடை செய் யப்பட்டுள் ளன. கருணாவின் ஆயுதக் குழு உறுப்பினர்கள் என்று கூறப்படுவோர் (TMVP) சுடர் ஒளி, தினக் குரல் ஆகிய இரு தமிழ் நாளிதழ்களை யும் தடை செய்துள்ளதாகவும், இப்பத்திரிகைகளின் விற்பனை யைத் தொடங்கக் கூடாதென்று மிரட்டியுள்ள தாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. மூன்றில் இரு பங்கினர் தமிழ் பேசும் மக்களாக உள்ள திருகோண மலையில் இப்பத்திரிகைகளை விற்கும் அறுபது முகவர்கள் இருந்தனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் சில பகுதிகளிலும் கருணா குழுவினர் சுடர் ஒளி, தினக்குரல் பத்திரிகைகளை இரண்டு மாதங் களுக்கு மேலாகத் தடைசெய்துள்ளனர் என்றும் புகார் செய்யப்பட்டுள்ளது.

**2.யாழ்ப்பாணப் பத்திரிகைகளை மூட வேண்டிய ஆபத்து:-**

ஓகஸ்ட் 11, 2006இல் ஏ -9 பாதை மூடப்பட்டமை காரணமாக அச்சுக் கருவிகள் கிடைக்காத தால் யாழ்ப் பாணத்தில் பிரசுரமாகும் பத்திரிகைகள் நிறுத்தப்பட வேண்டிய சூழ்நிலைக்கு முகம் கொடுக்கின்றன. உத யன், வலம்புரி, தினக்குரல் ஆகிய யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகும் மூன்று பத்திரிகைகள் தமது பத்திரி கைகளின் பக்கங்களை நான்காகக் குறைத்துள்ளன.

அத்துடன், முன்னர் 35,000 இதழ்கள் விநி யோகிக்கப்பட்ட சூழ்நிலையில் இப்போது மிகவும் குறைந்த எண்ணிக்கையில் 7,000 இதழ்கள் நாளாந்த விற்பனைக்கு உண்டு. 2006இல் மோதல் கள் அதிகரிக்க, குடாநாட்டைத் தெற்குடன் இணைக்கும் முக்கிய தரைவழிப்பாதையான ஏ - 9 வீதி மூடப் பட்டதைத் தொடர்ந்து, அச்சுக் கருவிகள், உபகர ணங்கள் அனுப்புவது மட்டுப்படுத்தப்பட்டு உள் ளது. கடல் வழியாக அவற்றை அனுப்பப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை.

யாழ்குடா நாட்டில் உள்ள ஏறத்தாழ 6 லட்சம் குடிமக்களால் தென்னிந்திய தொலைக்காட்சி ஒளிபரப்புகளையே பார்க்க முடிகின்றது. நமது நாட்டு ஒளிபரப்புகள் மிகவும் வலுக்குறைந்தவை யாக உள்ளன - இல்லையென்றே கூறலாம்.

**ஆறு தமிழ் ஊடகவியலாளர்கள் கொலை**

2006இல் ஊடகம், பத்திரிகைத்துறை யாழ்ப் பாணத்தில் மிகவும் மோசமான நிலையை அடைந் தது. 2005 தொட்டு ஆறு ஊடகத்துறை ஊழியர் கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். 2000ஆம் ஆண்டில் பரபலமான பத்திரிகையாளர் நிமலராஜன் யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட் டார். இவ்வாறான கொலைகள் எவ்வித பயமும் இன்றி நடைபெறுவது யாழ்ப்பாணத்தில் நாளாந்த நிகழ் வாகும்.

அரச படைகளில் சில பகுதியினரின் ஆதர வுடன் பெரும்பாலும் அரசியல் அல்லது இராணுவ காரணங்களுக்காக இடம்பெறும் கொலைகள், கடத் தல்கள், காணாமல்போதல் பற்றிய செய்திகளை வெளியிடும் பத்திரிகையாளர்கள் அதிகரித்துச் செல்லும் சாவல்களை எதிர்நோக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

## பலரும் தகவல் வழங்க முன்வராமையால் வதந்திகளும் ஊகங்களுமே மலிகின்றன

ஓகஸ்ட் மாதம் 11, 2006 இல் வெடித்த மோதல் பதற்ற சூழ்நிலை பல பத்திரிகையாளர்களையும், ஊடக ஊழியர்களையும் இத்துறையிலிருந்து வெளி யேறச் செய்தது. 'நமது ஈழநாடு' பத்திரிகையின் நிர் வாகப் பணிப்பாளர் கொலையுண்டதைத் தொடர்ந்து அப்பத்திரிகை நிறுத்தப்பட்டது.

தகவல் சேகரித்தல், நேரடி செய்தி சேகரிப்பு அல்லது அன்றாடச் சூழ்நிலை பற்றிய செய்திகள் வெளியிடுவது தனிப்பட்ட பாதுகாப்புத் தொடர்பான அச்சம் காரணமாக மிகவும் பார தூரமாக மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

சட்ட ஒழுங்கு பற்றிக் கவலைப்படாத, அச்ச உணர்வு மனோபாவம் மேலோங்கிய கலாசாரம் களத்தில் செயற்படும் பத்திரிகையாளர்களுக்கு ஒரு குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. பாதுகாப்பு அச்சம் காரணமாக யாரும் தகவல்களை வழங்க முன்வராத சூழ்நிலையில் வதந்தியும், ஊகமும் மலிகின்றன.

சம்பவங்கள் தொடர்பாக செய்திகளைச் சேகரிப் பதில், புகைப்படங்கள் எடுப்பதில் வழமையான நடைமுறைகளை யாழ்ப்பாணச் செய்தியாளர்கள் கையாள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ஊரடங் கும், போக்குவரத்துப் பிரச்சினையும் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்கள் தமது பணிகளைச் செய்வதைப் பாதித்துள்ளது.

தொடர்பு சாதன வாய்ப்பின்மை குடாநாட்டுப் பத்திரிகையாளருக்கு ஒரு தடையாகும். தொலை பேசித் திணைக்கள அலுவலகம் தொலைத் தொடர்பு வசதிகள் பத்திரிகையா ளர்களுக்கு வழங்க விரும்பு வதில்லை. இதனால் அவர்கள் கூடிய செல வினத்தைக் கொடுத்தும் கையடக்கத் தொலை பேசி களை நாட வேண்டியுள்ளனர்.

2007 ஜனவரி மூற் பகுதி வரை ஐந்து மாதங் கள் அரசு கையடக்கத் தொலைபேசி சேவைகளைக் குடாநாட்டில் நிறுத்திய வேளை, அவர்கள் தொலை பேசி வசதிகள் உள்ள இடங்களைத் தேடி நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற் பட்டது. சில சமயங்கள் இராணுவச் சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்ல வேண்டி இருந்தது.



**வாய்ப்புகள் வசதிகள் துண்டிக்கப்படுகின்றன**

இணையத்தள வசதிகளும் குறைவாகவே உள்ளன. ஊடரங்கு வேளைகளில் இவ்வசதிகள் உள்ள தொலைபேசித் தொடர்பு நிலையங்கள் மூடப்படுகின்றன.இதனால், யாழ்ப்பாணத்துப் பத்திரிகையாளர்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் அல்லது உலகுடன் தொடர்பு கொள் ளும் வாய்ப்புகள், வசதிகள் துண்டிக்கப்படுகின்றன. 'நமது ஈழநாடு' பத்திரிகை மூடப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது யாழ்ப்பாணத்தில் மூன்று பத் திரிகைகள் வெளியாகின்றன. அச்சுத் தாளின்மை யாலும், ஒவ்செட் அச்சுக்கான பிளேட் இன்மை யாலும் பத்திரிகைகளை வெளியிடுவதில் அவர்கள் திணறுகின்றனர். ஆக நாலு பக்கங்களையே வெளி யிடுகின்றனர். அவற்றிலும் அரைப் பங்கு விளம் பரங்கள். இவை தலா 10 ரூபாவுக்கு விற்பனையா கின்றன. வளங்கள், வசதிகள் இல் லாமையால், பிர சுரமாகும் பிரதிகள் மிகவும் கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பத்திரிகை களும் தற்போது நான்கு பக்கங்கள் உடையன வாகக் காணப்படுகின்றன. விரைவில் இவை இரு பக்கங்கள் ஆகிவிடும். அதுவும் கூட பெப்ரவரி 2007 வரை மட்டுமே.

முன்னாள் தமிழ் போராளிக் குழுவினரும் தற்போதைய அரசின் பங்காளருமான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வெளியிடும் பத்திரிகையான தின முரசைத் தவிர தேசியப் பத்திரிகைகள் எவையும் யாழ்ப்பாணத்தில் கிடைப்பதில்லை.இளமையும், துணிச்சலும் மிக்க பத்திரிகை யாளர்கள் இவற்றை ஒரு சவாலாக ஏற்று அவற்றை முறியடிக்க வேண் டும் என்று தமது பத்திரிகைப் பணியைத் தொடர்கின் றனர். எனினும், அச்ச உணர்வு அவர் களைக் கௌவி யுள்ளது. - சோத னைச் சாவடிகளில் தம்மைப் பத் திரிகையாளர்கள் என்று அடையாளம்காட்ட அவர் கள் அஞ்சுகின்றனர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு திருமண நிறைவு நாள் வாழ்த்து



என் உயிர்த் தோழி

## ஆன்செல்ம் நேரியோ பெனிற்றா

தம்பதியினரின் முதலாம் ஆண்டு திருமண நிறைவு நாளானஇன்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை என் அன்புத் தோழியை குழந்தை யேசுவின் நல் அருளும் ஆசியும் பெற்று இல்லறம் என்னும் இன்பச் சோலையில் இன்பமுடன் பதினாறும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றேன்.

பிரியமுடன்
நண்பி சுதா

14, மத்திய மேற்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் வ.ஐ.நல்லதம்பி

இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உதவிகள் பல செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய கிரியைகளும் இன்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அனைவரும் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

3ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.
(60139)
குடும்பத்தினர்.


---



திருவருள்மிகு

# கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள்

# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா



நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம்
சித்திரை மாதம் 17ஆம் நாள் (30.04.2007)
திங்கட்கிழமை முற்பகல் 09.06 தொடக்கம் 09.36
வரை வரும் சுப வேளையில்
விநாயகப் பெருமான் திருவருள் துணைகொண்டு
கைதடி கிழக்கு
**சிவசுப்பிரமணியம் சிவநேசன்**
குடும்பத்தினரின் திருப்பணிக் காணிக்கையினால்
திருநெல்வேலி சிற்பச் சக்கரவர்த்தி
**ஜீவரத்தினம் ஜெயப்பிரகாஸ்**
அவர்களின் தலைமையில் சிற்ப சாஸ்திரத்தின்படி
வகுக்கப் பெற்ற புதிய சித்திரத்தேர்
வெள்ளோட்டவிழா நிகழத் திருவருள் பாலித்துள்ளது.
எனவே அடியார்கள் அனைவரும் வருகைதந்து
விநாயகப் பெருமான் திருவருளைப்
பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சி.சுப்பிரமணியம் (கௌரவ செயலாளரும் நிர்வாகியும்)
சிவசுப்பிரமணியம் (குடும்பத்தினர்)
சி.செல்வஸ்கந்தநாதன் (பரம்பரைத்தலைவர்)

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்
முதலாய கோயில்களின்
நம்பிக்கைப் பொறுப்பாளர் – பரிபாலன சபை.

(அ 52309)

---

# 31ஆம் நாள் கண்ணீர்ப் பூக்கள்



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திருமதி ப.முருகதாஸ் (கொக்குவில் இராம கிருஷ்ணா வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தந்தை அமரர் **ஆறுமுகம் தம்பிராசா** 30.03.2007 அன்று சிவபதமடைந்தார். அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா உத்தியோகத்தர்கள்,
மாணவர்கள்.

யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங். பாடசாலை [நவோதயா]
(60143)

---




# Yogi's Beauty

Academy of Beauty Culture, Hair Dressing and Home Science

20 வருடங்களாக யாழ் நகரில் தரமான சேவையை வழங்கி வந்த Yogi's Beauty நிறுவனம் தற்பொழுது **கொழும்பிலும்** தமது சேவையை ஆரம்பித்துள்ளது.

"மணப்பெண் அலங்காரம் எமது சிறப்பம்சமாகும்" மேலும் Facials, Bleaching, Threading, Waxing, Perming, Straightning, Hair Treatments, Hair Coloring போன்ற சகலவிதமான சேவைகளும் வழங்கப்படுகின்றன. அத்துடன் அழகுக்கலை, ஒப்பனை அலங்காரங்கள், கேக் ஐசிங் அலங்காரங்கள் போன்ற வகுப்புக்களும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

சேரவிரும்புவோர் உடன் தொடர்புகொள்ளுங்கள்.

## Dr. (Mrs.) Yogini Shanmuganathan

Dip. in High Tech Aesthetician & Cosmetologist (India)
Dip. in Advanced Bridal Make-up & Character Make-up (India)
Dip. in Home Economics (Sri Lanka)

No.14, Ebenezer Place, Dehiwala.
(opposite to Dehiwala Municipal Council)
Tel : 060 2150731
Mobile : 0777-164923

No.75, Amman Road,
Nallur, Jaffna.
Tel : 021-2222796
Mobile : 077 3039661


---


### அபூர்வ ஜோதிடம்

தீராத பாரிசவாதம், இருதயநோய், இரைப்பை அல்சர் குணமாக்கும் மருந்தியல் அதிஷ்டகால ப ன் அறிதல்.
தினமும்: மு.ப 8.00- பி.ப2.00
உயரப்புல பிள்ளையார் கோயிலடி
விதானையார் வளவு, ஆனைக்கோட்டை.
(60135)

### வாகனங்கள் விற்பனைக்கு

WP GS XXXX இலக்கம் கொண்ட HIACE (டொல்பின்) வாகனமும், WP LE XXXX இலக்கம் கொண்ட ISUSU ELF TRUCK (ஹன்ரர்) வாகனமும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 36, சோமசுந்தரம் அவெனியூ, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 3078
(60136)

### வகுப்புகள்

*தமிழ்/ ஆங்கிலம்* Computer Typing, *தட்டெழுத்து, சுருக்கெழுத்து,* MS Office, PageMaker, Coreldraw, Photoshop
*தனிப்பட்ட ச னிப்பு, கற்கையை எக்காலத்த ும் ஆரம்பிக்கலாம்.*
STCA, 149, C37 சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்)
(60115)

### வீடு விற்பனைக்கு

*கொக்குவில் கிழக்கு, சம்பியன் நந்தாவில் வீதியில் அமைந்துள்ள சகல நவீன வசதிகளுடன் 2 ¾ பரப்பு சதுர காணியில் அமைந்துள்ள மேல் மாடியுடனான புதிதாகக் கட்டப்பட்ட வீடு விற்பனைக்குண்டு. நீர், மின்சாரம் மற்றும் நிலத்திற்கு மாபிள் (Terrosow) போன்ற சகல வசதிகளுடன் அமைந்துள்ளது. இத்துடன் புதிய ரக* Maruthi Suzuki vxi . zen *கார் விற்பனைக்குண்டு.*
தொடர்பு: 7/1, நந்தாவில் லேன், சம்பியன் லேன் ஊடாக, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(60138)

### IELTS

General/ Academic
*தேவையான புள்ளிகளைப் பெற விசேட ஏற்பாடுகள்!*
Office of the SriLankan
Co - ordinator
#2, Thiruvalluvar Lane,
Arasady Rd.,
Kandarmadam, Jaffna.
T.P.: 0777 250 555
(60121)

### நெற்காணி விற்பனைக்கு

சங்கானை கிழக்கு தேவாலய வீதியில் அமைந்துள்ள (பிரதான வீதிக்கு அருகில்) 13 ¾ பரப்பு நல்ல விளைச்சலுள்ள காணி கிணற்றுப் பங்குடன் ''வெள்ளைப் புலம்'' விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
011 2391398

### விற்பனையாகிறது

**2007 முதல் புதிய பாடத்திட்டம்**

- வரலாறு - தரம் - 10 (செயல்நூல்)
- உயிரியல்- தரம் - 10 (விஞ்ஞானம்)
- கணிதம் - தரம் - 09 (பயிற்சி நூல்)

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை
*235, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே: 9481*

### விற்பனைக்கு

லமினேசன் மிசின்கள், பக்ஸ் மெசின்கள், SHARP 5316 ரோனர், DRUM UNIT SHARP 126 ரோனர், H.P 15A ரோனர்ஆகியன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0775965284, 021 222 5413
ஆர்.எஸ். தொலைத் தொடர்பகம்
சிரணிச் சந்தி, சண்டிலிப்பாய்.


---

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உதவி அதிபர்
திருமதி
கௌரி சுந்தரலிங்கத்தின்
அன்புச் சகோதரி

## செல்வி தயாபரம்பிள்ளை இராஜேஸ்வரி

அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு விலைகளில் குடாநாட்டிலும் சகல பொருள்களும் கிடைக்குமா?

## அமைச்சர் கூறுவது சாத்தியப்படக்கூடியதா, என்ன...

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி யாழ். குடாநாட்டை தென்னிலங்கையுடன் இணைக்கும் ஏ-9 பாதை திடீரென மூடப்பட்டதன் காரணமாக பல்வேறு வகையான இக்கட்டுகளுக்கும் துன்பங்களுக்கும் இங்குள்ள மக்கள் முகம் கொடுத்து வந்துள்ளார்கள்; வருகின்றார்கள்.

குறிப்பாகக் கொழும்பிலிருந்து கொண்டு வரப்படும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் ஏனைய சில்லறை மற்றும் மருந்து வகைகள் போன்றவற்றின் வரவு தடைப் பட்டுப்போனதால் உள்ளூரில் கிடைக்கக் கூடியதாக இருந்த பொருள்களின் விலைகளும் ஆனைவிலை, குதிரை விலையெனத் திடீரென ஏறிப்போய்விட்டன. அதனால் மக்கள் எதிர்கொண்ட துன்பங்களும் இடர்பாடுகளும் கொஞ்ச நஞ்சமன்று.

அத்தியாவசியப் பொருள்கள் ஒருபுறமிருக்க உள்ளூரில் கிடைக்கும் சாதாரண மரக்கறிகளின் விலைகளும் உச்சநிலைக்கு சென்றுவிட்டன. எந்த ஒரு மரக்கறியும் நூறு ரூபாய்க்குக் குறைவாகக் கிடைப்பதாக (முதல் மூன்று மாதங்களில்) இருக்கவில்லை.

சாதாரணமாக கிடைக்கும் கத்தரிக்காய் கிலோ ரூபா 250 இல் இருந்து 300 ரூபா வரை அப்போது உயர்ந்து காணப்பட்டது.

இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு குடாநாட்டு விவசாயிகள் மரக்கறி உற்பத்தியில் தீவிரமாக இறங்கினார்கள். சிறு தானிய உற்பத்தியிலும் அவர்களின் கவனம் திரும்பியது. இப்பொழுது மரக்கறிகள் பொதுவாகக்கூறுவதானால் எதுவும் கூடினால் கிலோ 30 ரூபாவுக்கு மேல் விற்கப்படுவதாகத் தெரியவில்லை. குரக்கன், பயறு, சாமை, உழுந்து போன்ற தானியப் பயிர்கள் இப்பொழுது சந்தைக்கு வரத்தொடங்கி யுள்ளன.

கடந்த ஏழு மாத காலமாக கப்பல் மூலம் அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டு வந்த பொருள்கள் அரசாங்க அதிபரின் பணிப்புக்கமைய கட்டுப்படுத்திய விலைகளிலேயே விற்கப் பட்டன. எனினும் ஏ-9 பாதை வழியாகக் கொண்டு வரப்பட்டு விற்கப்பட்ட விலைகளிலும் பார்க்கக் கூடிய விலைகளிலேயே விற்கப்பட்டு வந்தன. ஆரம்பத்தில் அத்தியாவசியப் பொருள்கள் மட்டுமே கொண்டுவரப்பட்டன. கூட்டுறவுக் கடைகள் மூலமே அவை விற்கப்பட்டதால் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்தார்கள். பின்னர் உணவுக்குத் தேவைப்படும் ஏனைய பொருள்களும் கொண்டுவரப்பட்டு சிறிது சிறிதாகப் பங்கீட்டு முறையில் ப.நோ.கூ.சங்கக் கடைகள் மூலம் வழங்கப்பட்டன.

ஒருபொருளுக்காகப் பல பொருள்களை வாங்கவேண்டிய நிலை ஒரு பக்கமிருக்க விடியற்காலை முதல் கடும் வெயிலில் சங்கக் கடைகளின் முன்னால் மக்கள் வரிசைகளில் நின்று அவதிப்படும் நிலைமையும் ஏற்பட்டிருந்தது.

இன்று தனியார் நிறுவனங்களும் கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டுவந்து விற்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதால் தட்டுப்பாடான சகல பொருள்களும் கடைகளிலும் அங்காடி வியாபாரிகளிடமும் தாராளமாகக் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. 2006 ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் போன்று விலைகள் குறைந்துவிடவில்லை.

இந்த நிலைமையை கருத்தில் வைத்துக் கொண்டுதான் திட்டமிடல் அமைச்சரும் பாதுகாப்புத்துறை அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல, கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்து மக்களுக்கு பொருள் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று திருவாய் மலர்ந்திருக்கின்றார்.

ஏ-9 பாதை மூடப்பட்டவுடன் ஏற்பட்ட இக்கட்டான நிலைமையில் குடாநாட்டு மக்கள் பட்ட கஷ்டங்களின்போது இவ்வாறு எவரும் அக்கறை காட்டிப் பேசியிருந்தால் மக்கள் மகிழ்ச்சியடைந்திருப்பார்கள்.

பெரும்பாலும் பொருள்கள் கொழும்பில் விற்கப்படும் விலைகளுக்கு இரட்டிப்பு அதிகரித்த விலைகளிலேயே தற்பொழுது இங்கு கிடைக்கின்றன. குறிப்பாகப் பற்பசை மற்றும் பிஸ்கட் வகைகள் இரட்டிப்பு விலைகளிலும் சஸ்ரஜின், ரின்மீன், நூடில்ஸ் போன்றவை அதிகரித்த விலையிலும் விற்கப்படுகின்றன.

தட்டுப்பாடு ஏற்படும் சமயங்களில் விலைகள் அதிகரிப்பதும் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கும் போது விலைகள் குறைவதும் சகஜமே. அதற்கு அரசின் மந்திர தந்திரம் தேவையில்லை.

ஆனால், கப்பலில் வரும் பொருள்களை ஏ-9 பாதை வழியாக வாகனங்களால் கொண்டு வரப்படும் பொருள்களின் விலைகளுக்குக் குறைத்து எவரும் விற்று நஷ்டப்படுவார்கள் என்று எதிர் பார்க்க முடியாது. இந்நிலையில் கொழும்பு விலை யில் யாழ்ப்பாணத்தில் பொருள்களை வழங்க அமைச்சர் எவ்வாறு நடவடிக்கை எடுப்பார் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.




ஏ-9 பாதை மூடப்பட்ட அதே கால கட்டத்தில் குடாநாட்டு மக்களை 'சிக்குன்குனியா' விஷக்காய்ச்சல் வேறு தன் திருவிளையாடலைக் காட்டத் தொடங்கி யிருந்தது. அச்சமயம் பனடோல் வில்லை ஒன்று 12 ரூபாவுக்கு விற்கப்பட்டது. இதையெல்லாம் யார் கண்டார்கள், கவலைப்பட்டார்கள்!

எந்த ஒரு மனிதனின் வாழ்வும் வெறும் அரிசி, மா, சீனியில் மட்டும் தங்கியிருப்பதில்லை. வாழ்க்கை நடைபெறுவதற்கு வேறு தேவைகளும் உண்டு. இவற்றினால் அவனது இயல்பான வாழ்க்கைச் செயற்பாடுகள் முக்கியம். அதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதே மக்கள் நலன்விரும்பிகளின் - மக்கள் நல அரசின் நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறான இயல்பு வாழ்க்கை குடாநாட்டு மக்களுக்கு இல்லை.

**நேசமணி**

குறிப்பாக அவர்களது போக்குவரத்து மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டுக்குள்ளேயே ஒரு குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று திரும்புவது கேள்விக் குறியாகவிருக்கின்றது.

மருத்துவ நிலையங்களுக்கு, பாடசாலை மற்றும் கல்லூரிகளுக்கு ஏன் வேலைத் தளங்களுக்குச் செல்பவர்கள் கூட திரும்பி வருவதை நிச்சயப்படுத்த முடியாத நிலை. ஒருவர் ஒரு பணியின் நிமித்தம் வெளியில் சென்றால் அவர் திரும்பி வரும்வரை வீட்டிலுள்ளவர்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதைவிட குடாநாட்டைவிட்டு வெளியூர்களுக்குச் செல்லவேண்டியவர்கள் படும்பாடு கொஞ்ச நஞ்சமன்று.

அவசரமாக ஒரு மரணவீட்டுக்கு அல்லது ஒரு திருமண வீட்டுக்குப் போக வேண்டியவர்கள் அதற்கான வழமையான நடைமுறைகளைப் பூர்த்தி செய்து கொண்டு புறப்படும் முன்னர் அங்கே நடக்கவேண்டிய காரியம் முடிவுற்றிருக்கும் பரிதாப நிலை.

குடாநாட்டு மக்களை ஏதோ ஒரு வேற்று நாட்டு மக்கள் போல் அரசாங்கம் கருதுவதாலேயே இந்த நிலைமை.இது வெறுப்பையும் வேற்றுமையையும் மட்டுமே வளர்க்கும். நாட்டின் சகல மக்களையும் போல் குடாநாட்டவர்களும் நடத்தப்படும் காலம் வர வேண்டும். ❋

### விலை அட்டவணை

| பொருள்கள் | கொழும்பு | | யாழ்ப்பாணம் (தற்போதைய விலைகளில்) | |
|---|---|---|---|---|
| | புறக்கோட்டை | பங்கீட்டுக் கடை | ப.நோ.கூ. சங்கம் | தனியார் கடை |
| | ரூபா- சதம் | ரூபா-சதம் | ரூபா- சதம் | ரூபா- சதம் |
| சம்பா அரிசி | 34.00 | 28.00 | 48.00 | 45.00 |
| வெ. அரிசி | 24.00 | 31.00 | - | - |
| சி. அரிசி | 40.00 | 36.00 | 48.00 | 42.00 - 46.00 |
| நாட்டரிசி | 37.50 | 33.00 | 60.00 | 60.00 - 70.00 |
| சீனி | 56.00 | 60.00 | 60.00 - 63.00 | 63.00 |
| உ. கிழங்கு | 55.00 | 49.00 | 80.00 - 100.00 | 60.00 - 80.00 |
| கோவா | 80.00 | - | - | 20.00 |
| ப.மிளகாய் | 150.00 | - | - | 25.00 |
| கரட் | 120.00 | - | - | 20.00 |
| செ. மிளகாய் | - | - | 240.00 - 250.00 | 140.00 - 150.00 |

## தனியார் வைத்திய நிலையங்களை பதிய அறிவுறுத்து

கொழும்பு, ஏப்.29

நாட்டில் இயங்கும் சகல தனியார் வைத்திய நிலையங்களும் எதிர்வரும் ஜூன் மாதம் 23 ஆம் திகதிக்கு முன் சுகாதார அமைச்சில் பதிய வேண்டும்.

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இப்படி அறிவித்துள்ளார்.

பதிவு செய்யாத வைத்திய நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (1)

## மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு நிரந்தர மருத்துவமாது

நவாலி, ஏப்.29

மானிப்பாய் அரசினர் வைத்திய சாலைக்கு நீண்ட காலத்தின் பின்னர் மருத்து மாது ஒருவர் நியமிக்க 24 மணி நேர சேவைக்கென நியமிக்கப்பட்டுள்ளளார்.

பல காலமாக இவ் வைத்தியசாலைக்கு 24 மணிநேர சேவைக்கென மருத்து மாது ஒருவர் நியமிக்கப்படவில்லை. இதனால் பிரதேசத்தில் உள்ள கர்ப்பணித் தாய்மார் சிரமங்களை எதிர்கொண்டனர்.

தற்போது யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளரால் மருத்துவ மாது ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (202-100)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.29

உடுவில், மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி ஆலய சப்பர வெள்ளோட்ட விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2மணியளவில் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 3 மணிக்கு பெரிய சம்பறம் இடம்பெறவுள்ளது.

❋ ❋ ❋

யாழ்ப்பாணம், ஏப்.29

அரியாலை புனித யூதா ஆலயத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

(203)

# பல வகையான நெருக்கடிகளை....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**இலக்கு வைக்கப்படும் உதயன், சுடர் ஒளி பத்திரிகைகள்**

நீண்ட கால இனமோதல்களின் யதார்த்தத்தைப் பாரபட்சமின்றி வெளியிடுபவை, யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகும் உதயன், கொழும்பில் பிரசுரமாகும் 'சுடர் ஒளி' தமிழ் பத்திரிகைகள். 1985 இல் துவக்கப் பெற்ற 'உதயன்' வடக்கில் முன்னணியில் உள்ள பத்திரிகை மட்டுமல்ல செல்வாக்கும் உடைய பத்திரிகையுமாகும். கிழக்கிலும் கணிசமான அளவு கணிப்பில் உண்டு. அண்மைக்காலத்தில் துவக்கப் பெற்ற 'சுடர் ஒளி' இலங்கையின் ஏனைய பகுதிகளில் அதிகரித்து வரும் வாசகர் குழாமைப் பெற்றுள்ளது. தமிழரின் உண்மையான நிலைப்பாட்டினைக் கிரகிக்க வேண்டி, மோதலுக்கு அமைதித் தீர்வை நாடும் சர்வதேச சமூகமும், மக்கள் அபிப்பிராயம் உருவாக்கும் தலைவர்களும் இவ்விரு பத்திரிகைகளின் மொழி பெயர்ப்புகளையும் நாடுகின்றனர் என்பது பிரபல்யமான விடயம். மோதலுக்கு யதார்த்தமான, நியாயமான தீர்வு காண்பதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதே இப்பத்திரிகைகள் இரண்டின் நோக்கமாகும். செல்வாக்கு மிக்க அரச, தனியார் ஊடகங்களில் பெரும்பாலானவை இம்மோதல் தொடர்பான கள நிலையைக் குறிப்பாகத் தமிழ் மக்களின் குறைகள், அபிலாஷைகள் பற்றிப் பாரபட்சமின்றி வெளி யிடாத ஒரு சூழ்நிலையில், உதயன், சுடர் ஒளி பத்திரிகைகள் பொது மக்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் கூறித் தமது நோக்கத்தை நிறைவேற்ற முயல்கின்றன.

இவ்விரு பத்திரிகைகளான உதயன், சுடர் ஒளி தமிழர் தம் நிலைப்பாட்டின் அனைத்து நீரோட்டங்களையும் வலுவுடன், வெளிப்படுத்தும் பாங்கினால், தமக்கெனச் சில நலன்களைப் பேணும் சக்திகளின் சீற்றத்துக்கு ஆளாகி இருக்கின்றன. பெரும்பாலும் அரச முகவர்களாலும், அரசுடன் இணைந்த துணைப்படைகளாலும், இராணுவ நடவடிக்கைகளாலும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் கொடூர வன்செயல், பாரட்சம், நெருக்கடிகளைப் பொறுத்தளவில் இப்பத்திரிகைகள் ஆற்றும் பங்களிப்பு முக்கிய காரணமாகிறது. உதாரணமாகச் சொல்வதானால், திருகோணமலையில் ஐவர் கொல்லப்பட்டபோது அவர்கள் தம்வசம் இருந்த கிரனேட் தற்செயலாக வெடித்து மரணமாகினர் என்ற கூற்றை நிராகரிக்கும் வகையில் இப்பத்திரிகைகளில் பிரசுரமான செய்தி, படம் ஆகியன அவர்கள் ஐந்து மாணவர்கள் என்றும், அவர்கள் கடற்கரையில் கொல்லப்பட்டனர் என்றும் நிரூபித்தன. இச் செய்தியை அனுப்பிய செய்தியாளர் கொல்லப்பட்டார். புகைப்படம் எடுத்தவர் மறைவாக இருக்கிறார்.

இரு பத்திரிகைகள் மீதான இலக்கு வைத்த தாக்குதல் சம்பவங்கள் திகதிவாரியாக ஓகஸ்ட் 2005 தொடக்கம் - ஓகஸ்ட் 2006 வரை.

**ஓகஸ்ட் 23, 2005 -**

வெள்ளவத்தையில் உள்ள உதயன் விளம்பர சேவை அலுவலகம் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கு வைக்கப்பட்டது. வீசப்பட்ட குண்டு வெடிக்காத போதும், யாருக்கும் எதுவித காயத்தை விளைவிக்காதபோதும், எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தாத போதும், ஊழியர்களின் உயிராபத்தைக் கருத்திற்கொண்டும், வீட்டுரிமையாளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாலும், உதயன் தனது விளம்பர அலுவலக சேவையை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

**ஓகஸ்ட் 29, 2005 -**

ஒரு கிழமைக்குள் கிராண்ட்பாஸில் உள்ள சுடர் ஒளி அச்சகம் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானது.ஒரு காவலாளி உயிரிழந்தார். அங்கு நிறுத்தப்பட்டு இருந்த வாகனங்கள் திருத்த முடியாதவாறு சேதமடைந்தன. சிலர் காயமுற்றனர். பொலிஸாருக்குக் கொடுக்கப்பட்ட முறைப்பாடு எதுவித பலனையும் தரவில்லை.

பொலிஸாருக்குக் கொடுத்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து, ஊழியர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய விவரங்களைப் பொலிஸார் கோரினர். அவ்வாறு விவரங்களை வழங்கிய ஊழியர்கள், இக்குண்டுத் தாக்குதல்கள் தொடரும் எனக்கூறி மிரட்டப்பட்டனர் எனப் பின்னர் அறிய முடிந்தது. இந்தச் சூழ்நிலையில் பல ஊழியர்கள் வேலைக்குத் திரும்பவில்லை என்பது வியப்பல்ல.

**ஜனவரி 25,2006**

திருகோணமலையில் ஐந்து மாணவர்களின் கொலை பற்றிய செய்தி அனுப்பிய செய்தியாளர் கொல்லப்பட்டு உள்ளார். புகைப்படப்பிடிப்பாளர் தலைமறைவாகி உள்ளார். இப்புகைப்படமும், செய்தியும் தான் அவர்கள் தம்வசம் இருந்த கிரனேட் வெடித்து இறந்தனர் என்ற செய்தியை மறுக்க ஆதாரமாக இருந்தன.

**ஏப்ரல் 27,2006**

சுடர் ஒளி ஊழியர்கள் மூவர், அலுவலக வாயிலில் கைது செய்யப்பட்டு மறுநாளே விடுவிக்கப்பட்டனர். தமது தொடர்பு விவரங்களைத் தந்திருப்பின் அவர்கள் கைது தவிர்க்கப்பட்டிருக்கும் என்று அவர்களிடம் கூறப்பட்டது. தாம் ஏன் முழு இரவும் பொலிஸ் காவலில் இருக்க வேண்டி ஏற்பட்டது என் பது அவர்களுக்கு விளங்காமல் இருக்கிறது. பொலி ஸார் சுடர் ஒளி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இருப்பின் உரிய தகவல்களைப் பெறக்கூடியதாய் இருந்திருக்கும். இதுவும் நெருக்கடிக்கு ஓர் உதாரணம்.

**மே 2 - 2006**

முகமூடி அணிந்த, பயங்கர ஆயுதங்கள் ஏந்திய ஏழு பேர் யாழ்ப்பாண உதயன் அச்சகத்தையும், அலுவலகத்தையும் தாக்கியமையே இவற்றுள் மிகக் கொடூரமான பாரிய விளைவுகளை ஏற்படுத்திய வன்செயல் எனலாம். இந்த அனர்த்தத்தை விளைவித்த கூலிப்படையினர், பதவிக்கு வரும் ஒவ்வொரு அரசிலும் உயர்பதவி வகிக்கும் ஒரு தலைவரின் துணைப்படையைச் சார்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இருபது நிமிடங்கள் இவர்கள் நடத்திய கொடூர, பயங்கர தாக்குதலில், இரத்த வெறியில் விற்பனை முகாமையாளர் உட்பட இருவர் கொல்லப்பட்டனர். பலர் காயமுற்றனர். அவர்கள் சுட்ட சன்னங்களினால் கணினிகள், தளபாடங்கள உட்படப் பல சேதம் அடைந்தன. பொலிஸாருக்கு முறைப்பாடு செய்த போதும், குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு விவரமான வாக்கு மூலம் கொடுக்கப்பட்டபோதும், உரிய பலன் எவும் கிடைக்கவில்லை.

**மே. 16, 2006**

உதயன் நிர்வாகப் பணிப்பாளரின் கொழும்பு வாவஸ்தலத்திற்கு அருகாமையில் பல சந்தர்ப்பங்களில் ஆயுததாரிகளின் சந்தேகத்துக்கு இடமான நடமாட்டம் காணப்பட்டுள்ளது. மே மாதம் 16, 2006 இல் இது பற்றிப் பொலிஸாருக்கு முறைப்பாடும் செய்யப்பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் பொலிஸாரே அவர்களில் ஒருவரை புளொட் துணைப்படையைச் சார்ந்தவர் என அடையாளங் கண்டனர். அமைச்சர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு இயங்கும் அரசக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி. கட்சியின் துணைப் பணிடையினர் இராணுவத்தின் சில பிரிவினருடன் இணைந்து இயங்குவதால் இக் கொலைகள், தாக்குதல்கள் இடம்பெறுகின்றன என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

**ஓகஸ்ட் 18, 2006**

உதயனுக்குச் சொந்தமான இராஜ வீதியில் அமைந்துள்ள களஞ்சியசாலை தீ வைக்கப்பட்டது. ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடுவில் அம்மன் கோயில் சப்பர வெள்ளோட்டம்

உடுவில் அம்மன் கோயிலில் சிற்பாச்சாரியார் தம்பிஐயா குகதாசன் குழுவினரால் 3 வாசல் கொண்டு புதிதாக அமைக்கப்பெற்ற சப்பர வெள்ளோட்டம் நாளை (30.04.2007) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறும் என்பதையும் தொடர்ந்து அன்று பி.ப. 3 மணிக்கு சப்பரத் திருவிழா நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

**சி.முத்துச்சாமிக் குருக்கள்,**
**சி.பாலசுப்பிரமணியக் குருக்கள்.**

/60118)

# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.2005 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப் படாத நகைகள் யாவும் பின்வரும் திகதிகளில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ். பிரதான வீதி - 104 | 2007.06.02 2007.06.03 2007.06.09 & 2007.06.10 | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 2 | நீடித்த கருமபீடம் உரும்பிராய் | | |
| 3 | சாவகச்சேரி - 110 | | |
| 4 | யாழ். பல்கலைக்கழகம் - 162 | | |
| 5 | நீடித்த கரும பீடம், திருநெல்வேலி | | |
| 6 | யாழ். கன்னாதிட்டி - 284 | | |
| 7 | நீடித்த கருமபீடம், இணுவில் | | |
| 8 | யாழ். ஸ்ரான்லி வீதி - 030 | | |
| 9 | நீடித்த கருமபீடம்; மானிப்பாய் | | |
| 10 | காங்கேசன்துறை - 031 | | |
| 11 | நீடித்த கருமபீடம், மல்லாகம் | | |
| 12 | அச்சுவேலி - 107 | | |
| 13 | சங்கானை - 108 | | |
| 14 | சுன்னாகம் - 109 | | |
| 15 | வல்வெட்டித்துறை - 141 | 2007.06.09 & 2007.06.10 | மக்கள் வங்கி நெல்லியடி |
| 16 | நெல்லியடி - 106 | | |
| 17 | பருத்தித்துறை - 285 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொது முகாமையாளர்,
(வட வலயம்)
மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/50099)

# 6ஆம் மாத நினைவஞ்சலி



அமரர் **தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்**
மாதகல்

பிறப்பு 25.05.1948 — இறப்பு 29.10.2006

*எம்மை விட்டு நீங்கள் சென்று*
*ஆறு மாதங்கள் ஓடி மறைந்தும்*
*ஆறவில்லை எங்கள் சோகமே*
*எங்கள் இதயத்தில்*
*பாசத்தால் பதியம் இட்ட*
*உங்கள் நினைவுகளை*
*சுமந்து வாழ்கின்றோம்!*

**- குடும்பத்தினர்.**
மாதகல்.

70, அம்மன் வீதி,
நல்லூர். (60109)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 09 : 11 : 1983



எமனின் கயிற்றில் 16 : 03 : 2007

## செல்வி முருகேசு ஞானேஸ்வரி (செல்லா)

வீட்டில் கடைக்குட்டியாய் பிறந்து
உன் புன்சிரிப்பாலும், நற்பண்புகளாலும்
எல்லோரையும் வசீகரித்தாயே!
உன்னை மணக்கோலத்தில்
காணுவோம் என்று நாமிருக்க...
உன் உயிருக்கு நீயே
முற்றுப்புள்ளி வைத்தாயே அம்மா...
உன் உடலில் சிறுகாயம் வந்தால்கூட
தாங்க முடியாத நீ
உன் உயிருக்கு கயிறு போட்டாயே
ஏனம்மா?.... ஏனம்மா?....
உன் பெற்றோர்கள், சகோதரிகள்...
நாமிருக்க - எம்மை விட்டு
வெகுதூரம் சென்றது ஏனடா?...
இறுதியில் உன் முகம்கூட காணாமல்
தவிக்கின்றோமே...
ஆண்டுகள் பல போனாலும் மாறாது
உன் நினைவுகள் ......

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

571, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (59920)

என்றும் உன் நினைவில்:
தந்தை - மா.முருகேசு, தாய் - மு.[illegible]குமாரி,
சகோதரிகள் - மு.மங்களேஸ்வரி, மு.[illegible],
மு.விமலேஸ்வரி, மாமா, மாமி, சித்தி (கனடா).

# ADVENTIST
## அட்வெண்டிஸ்ட்

சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொடர்பு:
**850, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
தொ.பே.இல.:0776393417
ஆரம்ப திகதி:
**02.05.2007**

**நிர்வாகி**
**34B, கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்**

(60123)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலமாகவோ அல்லது விமானம் மூலமாகவோ உடனுக்குடன் உங்கள் பொதிகள் அனுப்பி வைக்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளியரின்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D.பெற்று உத்தரவாதத்துடன் உடன் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு: **EURO GROUPS**
0773846998, 0114542190.

## இறைச்சிக்கோழி விற்பனை

*புறோயிலர் இறைச்சி (ICE) வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம்.*
நல்லூர் பாம் சென்ரர், முருகேசர் லேன், நல்லூர்.

## இறைச்சிக்கோழி

*புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு.*
**NEW R.S.K. Farm**
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

## அந்தணர் தேவை

மண்டைதீவு, சிறுப்புலம் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய தேவஸ்தானத்தில் தினமும் காலை வேளை பூசைகள் செய்வதற்கு அந்தணர் ஒருவர் உடன்தேவை. மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.சம்பளம் நேரில் பேசி முடிவு செய்யப்படும்.

*விளம்பர இல. 2967*
*மே/பா உதயன்* (60950)

## இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
## பிருந்தாவன் கல்லூரி

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

அடிப்படைத் தகைமை க.பொ.த (உயர்தரம்) 2 பாடங்களில் சித்தி

பதிவுகள் தற்போது மேற் கொள்ளப்படுகின்றன

**Company Secretarial Services(Pvt.)Ltd.**

285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043

## தவறிவிட்டது

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி சிவக்கொழுந்து சிவனேசன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 522883522V). CTB அ.அட்டை(இல.001034), வி.அ.அட்டை என்பன 15.04.2007 ஆடியபாதம் வீதிக்கும் திருநெல் வேலி சந்தைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆடியபாதம் வீதி, தேவி மில்லில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (59974)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**Dr. வாசுகி தயாவன்**

மலர்வு 09 : 10 : 1962 — உதிர்வு 11 : 05 : 2005

திதி: 29.04.2007
ஞாயிற்றுக்கிழமை

அன்புருவாய் அறிவூட்டி அரவணைத்த எம் தெய்வம்
என்புருகிச் சென்றாய் எம் இதயம் இரங்கி ஏங்குகிறது
பண்பால் உளம் உண்ட பத்தினியே பரிதவிக்கின்றோம்
உன் ஆவி உமைபால் உறைந்து எமக்கருள்வாய்.

'துவாரகை'
கைதடி மேற்கு.
**- குடும்பத்தினர்.**
(59926)

# WALK IN INTERVIEW

2006இல் சிறந்த சேவை வழங்கு கம்பனியாகத் தெரிவுசெய்யப்பட்டு 2007இல் புதிய பரிமாணத்துடன் காலடி எடுத்து வைத்திருக்கும் ஜனசக்திக் காப்புறுதி கம்பனி, காப்புறுதி ஆலோசகர் பதவிக்குத் தகுதியானவர்களைத் தேர்வுசெய்ய உள்ளது.

*பதவி:* காப்புறுதி ஆலோசகர்

*தகைமை:*
- ★ 18 வயதிற்கு மேற்பட்டிருத்தல்
- ★ க.பொ.த. [சா/த] தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி.
- ★ சரளமாக உரையாடும் திறன்

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:
**ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி**
*இல.165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*காலம்:*
*03.05.2007 வியாழக்கிழமை*
*முற்பகல் 9 மணி*

(59945)

# BECOME A DOCTOR (MD Medicine)
## கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பட்டப்படிப்பு

இலங்கை அரசாங்கத்தினாலும், உலக சுகாதார நிறுவனத்தினாலும் (WHO) ஏற்றுக்கொள்ளப்பட்ட மிகவும் பிரபல்யமான உலக மற்றும் இலங்கை மாணவர்கள் அதிகம் படித்துக் கொண்டிருக்கும் ரஷ்யா (Russia), பெலாரூஸ் (Belarus) யூனிவர்சிட்டிகளில் பட்டம் பெற்று ஆங்கில டாக்டராகுங்கள்.

- A/L புள்ளி குறைந்த மாணவர்களுக்கு பிரத்தியேக ஏற்பாடுகள்
- O/L மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள்
- வங்கி நிலுவைகள், தூதரக நேர்காணல் தேவையில்லை
- அங்கிருந்து வேறு நாடுகளுக்கு செல்ல அறிவுரைகள்/ ஏற்பாடுகள்
- பெண்களுக்கு அதிக பாதுகாப்பு, விடுதி ஏற்பாடுகள் (தாய் 2 - 3 மாதங்கள் மாணவியுடன் தங்கியிருக்கவும் விசேட ஏற்பாடுகள்)

உலகத் தரத்திலான வைத்திய கல்வியை ஐரோப்பிய நாகரிகம் - பண்பாடு, செழுமையான பாரம்பரியங்கள் மிகுந்த ஜேர்மனி, போலந்து நாடுகளினால் சூழப்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பெறுங்கள்.

OVERSEAS STUDENT PROGRAMME
Office Of the Sri LankanCo-ordinator.
T.P.: 0777 250555 (60120)

2, திருவள்ளுவர் ஒழுங்கை,
அரசடி வீதி;
சுந்தர்மடம், யாழ்ப்பாணம்.

# பஞ்சகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகம்



வடமராட்சி / நவிண்டில் சுந்தர ஐயப்ப ஆஞ்சநேயர் சுவாமிகளுக்கு இன்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மஹாகும்பாபிஷேகம் நிகழும். பி.ப.3 மணிக்கு விசேட பூசை, படிப்பூசை, வசந்தமண்டபப் பூசை, திருவூஞ்சல் உற்சவம் நிகழும். அனைவரும் வருக. சபரி ஐயன் கலியுகவாசன் கானகவாசன் அருள் பெறுக.

*பிரதம குரு*
*சபரிமலை குருசுவாமி*
*பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார் (சபரீகிரிவாசன்)*
**சுவாமியே சரணம் ஐயப்பா**

**ஆலய குருசுவாமி**
**பிரம்மஸ்ரீ ந.சுந்தரேஸ்வர சர்மா**

(59767)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## பிடுங்கி எடுப்பதைத் தவிர தமிழருக்கு வேறு ஏது வழி?

தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரு பிரதான சிங்களக் கட்சிகளுமே 'ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தாம்' - என்று சில வாரங்களுக்கு முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். அதை உறுதிப்படுத்துவது போல இருகட்சிகளுமே செயற்படுகின்றன.

பௌத்த - சிங்களப் பேரினவாதிகளை அணி திரட்டி, அவர்களின் ஐக்கியத்தைத் தனது வலிமையாக்கிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி காலங்காலமாகத் தான்பின்பற்றி வரும் சிங்களத் தேசியவாத இரும்புப் பிடியில் இருந்து சற்றேனும் விலகுவதாக இல்லை. அதன் சிங்களத் தேசியக் கடுங்கோட்பாட்டுப் பிடிக்கு மேலும் வலுச் சேர்த்திருக்கின்றது மஹிந்த ராஜபக்ஷவின் திமிர்த் தனத் தலைமை. இதன் காரணமாக இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி வழியில் தீர்வு காணும் அமைதி முயற்சிகளில் இருந்து அது விலகிச் செல்கின்றது. பாதிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மையினரான தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் நீதித் தீர்வு ஒன்றை வழங்குவதை விட இராணுவப் பலத்தின் அடிப்படையில் - போரியல் செயற்பாட்டின் போக்கில் - இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அது முயல்கின்றது என்பது அப்பட்டமாகவே வெளிப்படுகின்றது.

இனப்பிரச்சினை இவ்வாளவு மோசமாக முற்றி, பெரும் உள்நாட்டுப் போராக வெடித்த பின்னரும் கூட, நியாயமான உரிமைகளை வழங்கும் அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஒன்றைத் தமிழருக்குத் தருவதற்கு ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாரில்லை என்பது, இனப்பிரச்சினைக்கான தீர்வை சிபாரிசு செய்வதற்கான அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அமைப்புக்கு அக்கட்சி சமர்ப்பிக்க உள்ள யோசனையின் அடிப்படை நமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

எல்லாக் கட்சிகளும் இந்தக் குழுவுக்கு தமது தீர்வு யோசனைத் திட்டங்களைச் சமர்ப்பித்த நிலையில் நீண்ட காலம் இழுத்தடித்து விட்டு, அடுத்த மாத முற்பகுதியில் (அதாவது அடுத்த வாரத்தில்) அதை சமர்ப்பிப்பதாக அக்கட்சி அறிவித்திருந்தது. அறிவிக்கப்பட்டபடி மே முதல் வாரத்தில் அது சமர்ப்பிக்கப்படுமா அல்லது இன்னும் இழுத்தடிக்கப்படுமா என்பது தெரியவில்லை. ஆனால், அந்த யோசனையின் அடிப்படை அம்சம் எவ்வாறு அமையும் என்பது பற்றிய தகவல் மட்டும் வெளியாகிவிட்டது.

நீண்ட கால இழுபறிக்குப் பின்னர் மலையைக் கெல்லி எலியைப் பிடித்த மாதிரி அதன் தீர்வு யோசனை அமைகின்றது. 'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல' தமிழர் தாயகத்துக்கான அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை உளுத்துப் போன மாவட்ட அபிவிருத்திச் சபை மட்டத்தில் கொண்டுபோய் நிறுத்தியிருக்கின்றது அதிபர் மஹிந்தரின் ஆளும் கட்சி.

எண்பதுகளின் முற்பகுதியில் அப்போதைய ஜெயவர்த்தன அரசினால் முன்வைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு, தமிழர் தாயகத்தால் நிராகரித்து ஒதுக்கப்பட்டு, செல்லாக்காசாகிப் போனமாவட்ட அபிவிருத்திச் சபை முறைமையை தமிழர் தேசம் மீது திணித்து இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என ஆளும் கட்சி கனவு காண்கின்றது.

பௌத்த - சிங்களப் பேரினவாதிகளை முற்றாக அரவணைத்து நிற்கும் ஆளும் கட்சிதான் இப்படி யதார்த்தம் புரியாமல் இறுமாப்புடன் நடக்கின்றது என்றால், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் தானும் அதற்கு சளைத்ததல்ல - பேரினவாதப் போக்குடைய கட்சிதான் - என்பதை நிரூபிக்க ஒற்றைக் காலில் நிற்கின்றது.

இந்த ஐ.தே.கட்சி, ஆட்சியிலிருந்த இரண்டரை ஆண்டு காலத்திலேயே பிந்திய அமைதி முயற்சிகள் - சமாதானப் பேச்சுகள் - மேற்கொள்ளப்பட்டன.

'தமிழர் தாயகமான வடக்கு - கிழக்குக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஆராயத் தமிழர் தரப்புடன் இணக்கியதும் இதே ஐ.தே.க. தலைமையிலான அரசுதான். 2002 இறுதியில் ஒஸ்லோ பேச்சுகளின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் ஒப்பமிட்டு இதை உறுதிப்படுத்தியிருந்தது ஐ.தே.க. அரசு.

ஆனால், தமிழருக்கு நியாயமான தீர்வை வழங்கினால் தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் பெரும்பான்மை ஆதரவை இழந்து விடுவோம் என்ற யதார்த்தம் புரியத் தொடங்கியதும், அக்கட்சியும் தனது சுருதியை மாற்றிக் கொள்ளத் தொடங்கிவிட்டது.

ஐ.தே.க.வின் இப்போதைய நிலைப்பாட்டை அக்கட்சியின் எம்.பியும் அரசமைப்பு விவகார நிபுணருமான கே. என் சொக்ஸி வெளியிட்டிருக்கின்றார்.

ஆளும் ஸ்ரீ.ல.சு. கட்சி கூறுவது போல மாவட்ட அபிவிருத்தி சபை முறைமை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று கூறியுள்ள அவர், மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரம் வழங்குவதன் மூலம், இப்பிரச்சினையைத் தீரக்கலாம் என்கிறார். வடக்கையும் கிழக்கையும் - கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி முடிவு எடுக்கும் வரை - தற்காலிகமாக இணைக்கலாம் என்றும் கூறுகின்றார்.

எண்பதுகளின் முற்பகுதியில் கொண்டுவரப்பட்டு பயனின்றிச் செயலிழந்த மாவட்ட அபிவிருத்திச் சபை முறையையும் எண்பதுகளின் பிற்பகுதியில் கொண்டு வரப்பட்டு அதேபோல பயனின்றிப் போன மாகாண சபை முறையையும் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றன சிங்கள மக்களின் இரு பிரதான கட்சிகளும்.

'வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்துக்கு உள்ள சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி ஆட்சி அலகு' குறித்து இணக்கம் கண்ட ஐ.தே.கட்சியே மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறியது போல, பேரினவாதக் கொப்பில் ஏறி நின்றுகொண்டு மாகாண சபை என்ற - தமிழரால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட - பழைய பல்லவியைப் பாடுகின்றது. அதுவும் தமிழர் தாயகத்தின் ஐக்கியத்தை தற்காலிக ஏற்பாடாக மட்டும் அது பிரேரிக்கின்றது.

ஈழத்தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை உள்வாங்க விரும்பாமல், பெரும்பான்மைச் செருக்கில்-நிற்கும் தென்னிலங்கையிடம் 'மயிலே! மயிலே! இறகு போடு!' என்ற பாணியில் கையேந்தி நிற்பதில் பலனில்லை - அர்த்தமில்லை. இறகு தேவையானால் பிடுங்கித்தான் எடுக்க வேண்டும். மீண்டும் மீண்டும் தமிழர்களை அந்த நிலைக்கே தள்ளி வருகிறது சிங்களத்துவம்.

# அங்கீகரிக்கப்படாத போலி மருந்துகள் குடாநாட்டில் பரவலாக விற்பனையில்

## சுகாதாரப் பிரிவினரின் திடீர் சோதனையில் கண்டுபிடிப்பு

குருநகர், ஏப்.29

கொழும்பு சுகாதார அமைச்சின் மருந்துப் பகுதியில் பதிவுசெய்யப்பட்டு அங்கீகரிக்கப்படாத போலி மருந்துகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்டுவந்தமையாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போலி மருந்துவகைகள் விற்பனை செய்வது தொடர்பாக பொது மக்களால் சுகாதாரப் பணிமனையில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதனையடுத்து சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது முறைப்பாடுகள் உண்மையென்க் கண்டறியப்பட்டது.

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலக உணவு, மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி எஸ்.மகாதேவன் இத் தகவலைத் தெரிவித்தார்.

வியாபாரிகளால் விற்பனைக்கு எடுத்துச்செல்லப்பட்ட போலி மருந்துகளும் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு போலி மருந்து விற்பனையில் ஈடுபடுவோர் தொடர்பான விவரம் தெரிந்தால் உடனடியாகச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு அறிவிப்பதன் மூலம் உடனடி நடவடிக்கை எடுக்க வாய்ப்பு உண்டு என்று கட்டுப்பாட்டு அதிகாரி மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-203-51)

## பெற்றோல் விநியோகம்

யாழ். "மாக்பெட்" எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடந்த 10ஆம் திகதிக்கு முன்னர் பெற்றோல் பெற்றவர்களுக்குத் தற்போது பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை - மோட்டார் சைக்கிள்களுக்கு எரிபொருள் தாங்கிகளில் மட்டும் பெற்றோல் வழங்கப்படுவதால், ஒரே தடவையில் 400 ரூபாவுக்கு வழங்கப்படும் பெற்றோலை தாங்கியில் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் தாங்கிகளில் பெற்றோலைப் பெற்றதும் மிகுதியை வேறு கொள்கலன்களில் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர். (203-51)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 29

திருமறைக் கலாமன்ற நாடகப் பயிலகத்தின் 14ஆவது பிரிவின் ஆரம்பவைபவமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு 128, டேவிற் வீதியில் அமைந்துள்ள கலைக் கோட்டத்தில் இடம்பெறவுள்ளன. (203)

## தன்னார்வ சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 29

கொக்குவில் மேற்கு பாக்யா இசைப்பயிலகத்தில் மாதந்தோறும் நடைபெற்றுவரும் தன்னம்பிக்கைச் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இரா. செல்வவடிவேல் சொற்பொழிவாற்றவுள்ளார். (203)

## கொள்ளையர் அட்டகாசம்: பீதியில் வாழும் மக்கள்

ஏழாலை, ஏப். 29

ஏழாலை தெற்கு, சூராவத்தை, மயிலங்காட்டுப் பகுதியில் அண்மைக் காலமாகக் கொள்ளையர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. பிரதேச மக்கள் பெரும் பீதியுடன் வாழ்கின்றனர்.

இரவு வேளையில் முகங்களை கறுப்புத் துணிகளால் கட்டி வாள்கள், கத்திகள், பொல்லுகள் என்பவற்றுடன் வரும் கொள்ளையர்கள் வீட்டிலிருப்பவர்களை கட்டி வைத்தும் மிரட்டியும் கொள்ளையிடுகின்றனர்.

இச் சம்பவங்கள் மேற்படி பிரதேசத்தில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. (202-45)

**நாளை**
சித்திரை - 17
திங்கட்கிழமை
30.04.2007
திதி: திரயோதசி
முற்பகல் : 11.47
நட்சத்திரம்: அத்தம்
பிற்பகல் : 03.14
சுபநேரம் : 11.58 - 01.28
ராகுகாலம் : 07.28 - 08.58

## போஷாக்குக் குறைபாடு நிலவுவதால் குடாநாட்டில் நோய்களின் தாக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

குடாநாட்டில் நிலவும் யுத்தச் சூழல் காரணமாக மக்களிடையே போஷாக்குக் குறைபாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நோய்களின் தாக்கங்களும் அதிகரித்துள்ளன.

இவ்வாறு யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி க.சி. யமுனானந்தா கவலை தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களின் புள்ளிவிவரங்களின் படி யாழ். மாவட்டத்தில் காசநோயால் பாதிக்கப்பட்டு 45பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

போதிய போஷாக்கின்மையே இது போன்ற நோய்த் தாக்கங்கள் அதிகரிக்கக் காரணமாக உள்ளன என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை - கடந்த வருடம் 280 பேர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (203-51)



முன்னாள் கல்விப் பணிப்பாளர் அமரர் இரா. சுந்தரலிங்கத்தின் நினைவு அஞ்சலிக் கூட்டம் நேற்று இணுவில் அறிவாலயத்தில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் மேலதிக மாவட்ட கல்விப் பணிப்பாளரும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருமான வே. தி. செல்வரத்தினம் உரையாற்றும்போது எடுக்கப்பட்ட படம். அருகில் நல்லை ஆதின முதல்வர் காணப்படுகின்றார். (படம் - நேசன்)

## வலி.தென்மேற்கில் கலாசார மண்டபம்: 50 லட்சம் ரூபா வழங்கியது அமைச்சு

யாழ்ப்பாணம், ஏப்.29

வலி.தென்மேற்கில் கலாசார மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சு 50 லட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளது.

இந்தக் கலாசார மண்டபத்துடன் கருத்தரங்கு மண்டபம் ஒன்றை அமைப்பதற்கென 2 கோடி ரூபாவுக்கான திட்ட முன்மொழிவு பிரதேச சபைச் செயலாளரால் வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய முதற்கட்டமாக அரச அதிபர் ஊடாக கலாசார மண்டபம் அமைப்பதற்கென 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக் கலாசார மண்டபத்தை அமைக்கும் முதற்கட்ட வேலைகளைக் கட்டடத்திணைக்களம் ஆரம்பித்துள்ளது. (202-95)

## வடமராட்சியில் மீன் பிடிக்க அனுமதி

நெல்லியடி, ஏப். 29

வடமராட்சி கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு இரு தினங்களின் பின்னர் படைத்தரப்பு நேற்று அனுமதி வழங்கியதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

வடமராட்சிக் கடற்பரப்பில் கடந்த இரண்டு தினங்களாக மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு படையினர் அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-115-4)

## உடற்கல்விக் கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி 7ஆம் அணி மாணவர்களுக்கான கல்விசார் நடவடிக்கைகள் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

அன்றையதினம் காலை 8 மணிக்கு மாணவர்களைப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்திற்குச் சமுகமளிக்குமாறு பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார். (203)

## பண்டத்தரிப்பு மருந்தகம் தரம் உயர்த்தப்பட்டது

வலி. தென்மேற்கு, ஏப். 29

பண்டத்தரிப்பு ஆயுள்வேத மத்திய மருந்தகம் இம்மாதம் தொடக்கம் கிராமிய ஆயுள்வேத வைத்திய சாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுதேச மருத்துவத்துறை பணிப்பாளர் இது பற்றி தமக்கு [illegible] பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளார். (135)

## காரைநகரில் அடுத்த வாரம் பல்துறைசார் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாண லயன்ஸ் கழகமும் காரை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்தும் பல்துறை சார் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காரைநகர் சுற்றயல்கூறு வைத்தியசாலையில் நடைபெற உள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 1 மணி வரை இந்த இலவச மருத்துவ முகாம் இடம்பெறும்.

மேற்படி மருத்துவமுகாமில் சத்திரசிகிச்சை, மருத்துவ, பெண்நோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவவியல், புற்றுநோயியல், கண்நோயியல் மற்றும் சருமநோயியல் சார் மருத்துவர்கள் கலந்துகொண்டு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்த அழுத்த சோதனை மற்றும் சிறுநீர், இரத்த சோதனைகளும் அங்கு மேற்கொள்ளப்படும்.

காரைநகர், மூளாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை மற்றும் தீவகங்களைச் சேர்ந்த நோயாளர்கள் இலவச மருத்துவ முகாமில் கலந்துகொண்டு வைத்தியசேவை பெறலாம் என்று அனுசரணையாளர்கள் தெரிவித்தனர். (அ)

## குஞ்சர் கடையடியில் இருவர் மீது சூடு

உடுப்பிட்டி, ஏப். 29

இமையாணன், குஞ்சர் கடையடிப் பகுதியில் நேற்றுக்காலை 6.30 மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயம் அடைந்தனர்.

சைக்கிளில் சென்ற இருவரை நோக்கி, வாகனம் ஒன்றில் வந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என்றும் -

இதில் காயமடைந்த ஒருவரை அவர்கள் வானில் ஏற்றிச் சென்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மற்றையவர் தப்பி ஓடிவிட்டார் என்றும்அறியப்படுகிறது. (அ-1-155)

## கரவெட்டியில் சூடு; இளைஞன் காயம்

நெல்லியடி, ஏப்.29

கரவெட்டியில் நேற்று மாலை 5மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த இளைஞன் ஒருவர் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த தவராசா தினேஷ்(வயது 23) என்பவரே காயமடைந்தவராவார்.

அவர் வீட்டில் இருந்த சமயம் அங்கு வந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## வடமராட்சியில் இன்று மருத்துவமுகாம்

வடமராட்சி, ஏப். 29

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இலவச மருத்துவ முகாமும் காச நோயாளர்களுக்கான சோதனையும் இன்று காலை 9 மணிக்கு அல்வாய் மகாத்மா காந்தி சனசமூக நிலையத்தில் நடைபெற உள்ளது. வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எம். தங்கராசா இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த மருத்துவ முகாமை யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களும் நடத்த உள்ளனர். (1-4)

## மேதினக் கூட்டம்

குருநகர், ஏப்.29

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். கிளையில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேதினக் கூட்டம் நடைபெறவுள்ளது. கட்சியின் யாழ். மாவட்ட உப தலைவர் எஸ்.தேவகுலநாயகம் இதனைத் தெரிவித்தார். (அ-203-51)

## அச்சாணி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ். மிட்ரவுண் றோட்டறக் கழகத்தின் வருடாந்த மலரான 'அச்சாணி - 7' வெளியிட்டு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு 'உதயன்' விருந்தினர் விடுதியில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக றோட்டறியன் எஸ். ஸ்ரீபதி கலந்துகொள்வார். முதல் பிரதியை கழகத்தின் முன்னாள் தலைவர் எஸ். முரளிதரன் பெற்றுக்கொள்வார். (அ-1)

## நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஏ.சி.ஜோர்ஜ் எழுதிய ''ஆசிரியத்துவமும் பால்நிலை அறிக்கையும்'' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வேம்படி வீதியில் உள்ள அகவிழி, (யாழ்.) அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் அறிமுக உரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் நூல் மதிப்பீட்டு உரையை யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுஷ்யா சத்யசீலனும் நிகழ்த்தவுள்ளனர். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கள சமரவீர அடுத்தவாரம் அமைச்சராகப் பதவியேற்கிறார்

கொழும்பு, ஏப்.29

அரசில் இருந்து விலக்கப்பட்ட துறைமுக அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீர அடுத்தவாரம் மீண்டும் அமைச்சர் பதவியை ஏற்கவுள்ளார் என்று மிக நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் தனது முன்னைய அமைச்சுப் பதவியை ஏற்கவுள்ளார் என்று அரசாங்கத் தரப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கும் மங்களவுக்கும் இடையில் கடந்த வாரம் நடைபெற்ற பேச்சுக்களின் பயனாக மங்கள தனது முன்னைய அமைச்சர் பதவியை ஏற்க இணக்கம் தெரிவித்துள்ளார் என அரசாங்க வட்டாரங்களில் பரவலாகப் பேசப்பட்டது.

# உயர்ந்த கட்டடங்களில் மின் விளக்குகளை தவிர்க்கவும்

## பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தல்

கொழும்பு, ஏப்.29

கொழும்பில் உள்ள உயர்ந்த கட்டடங்களில் மின் விளக்குகளைப் பொருத்த வேண்டாம் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் வான்படையினர் தாக்குதல்கள் நடத்துவதைத் தவிர்க்கும் நோக்குடன் இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு மக்களைக் கேட்டுள்ளது.

கொழும்பில் உள்ள உயர்ந்த கட்டங்கள், ஹோட்டல்கள் ஆகியவற்றின் மேல் மாடிகளில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் விடுதலைப் புலிகள் தமது இலக்குகளை இனங்காண முடியும். எனவே உயர்ந்த கட்டடங்களில் மின் விளக்குகளைப் பொருத்துவதைத் தவிர்த்துக்கொள்ளவும் என்று - பாதுகாப்பு அமைச்சு பொதுமக்களையும் நிறுவனங்களையும் கேட்டுள்ளது. (அ-1)

# குடாக்கடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் 512ஆவது படைப்பிரிவு நேற்றிரவு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

**புலிகளின் ஷெல் தாக்குதலே காரணம்**

மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடும் வேளைகளில் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முடியாத அளவில் சில சில சம்பவங்கள் இதற்கு முன் நடந்தன. அதனால் 17.01.2007 அன்றிலிருந்து இராணுவத்தினரால் கடற்தொழிலுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டது.

எனினும் எமக்கு ஏற்படும் இழப்பைக் கூட கருதாது மீனவக் குடும்பங்களின் நன்மை கருதி மீண்டும் 28.04.2007 அன்று மீனவர்களுக்கு தொழில் செய்வதற்கு இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்டது. பாஷையூர் இறங்குதுறையிலிருந்து பூநகரி - கல்முனை கடற்பிரதேசத்திற்கு கடற்தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் மீது, மு.ப.10.45 மணியளவில் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியதில் பஷையூர் 2ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராயப்பு ஜோசப் எனும் 52வயதுடைய மீனவர் உயிரிழந்துள்ளார்.

**அனுமதிக்கமுடியாது**

இவ்வாறான கொடூரச் செயலை பொது மக்களின் நன்மையை கருதும் பொறுப்புடைய பாதுகாப்புப் படை என்ற வகையில் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எனவே இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன் யோசப் அவர்களின் இழப்பினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனவே தமிழ் மக்களின் விடுதலை விரும்பிகள் என்று கூறிக்கொண்டு இவ்வாறான புலிகளின் செயல்களினால் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கடற்தொழில் செய்வதற்குரிய பிரதேசத்தை மட்டுப்படுத்த இராணுவத்தினர் தீர்மானித்துள்ளனர் என்பதை மிக மனவருத்தத்துடன் தெரியப்படுத்த வேண்டியுள்ளது.

**ஒத்துழைப்புத் தருக**

மீனவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கையானது பாதுகாப்புச் செயற்றிட்டம் என்பதால் இதனால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருத்தத்தை தெரியப்படுத்துகின்றோம். இதற்கு உங்களின் ஒத்துழைப்பைத் தந்துதவுமாறும் தயவுடன் வேண்டுகின்றோம் - என்று உள்ளது. (அ-1)

# மாகாண சபைகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரப் பகிர்வு ஒத்த - ஒரே - தன்மையுடையதாக இருக்கவேண்டும். ஏற்றத்தாழ்வு ஏதுமின்றி சமநிலை பேணப்படவேண்டும்.

★ இரண்டாவது மக்கள் சபையான மூதவை (செனட்) நிறுவப்படவேண்டும். பல்லின பல மத மக்களைக் கொண்ட நாடுகளில் மூதவை சமநிலை பேணுவதற்கு உதவுகிறது.

- அதாவது சிறுபான்மை இன, மத மக்களுக்கு மூதவையில் கூடுதல் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்.

★ நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடர வேண்டும். ஆனால், நிறைவேற்று அதிகாரம், விரைவான பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் வகையில் இப்போதுள்ள முறையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

★ ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்னர் பிரதம மந்திரியை கலந்தாலோசிக்க வேண்டும் எனவரையறுக்கும் திருத்தம் கொண்டு வரப்படவேண்டும்.

★ ஜனாதிபதி நாட்டின் சட்டங்களுக்கு அப்பாற்பட்டவராக அன்றி அவற்றை பேணிச் செயற்படுவதற்கும் திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு யோசனையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாளைமறுதினம் - முதலாம் திகதி - அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு சமர்ப்பிக்கப்போவதாக அறிவித்துள்ளது.

ஸ்ரீ.ல.சு.கட்சி தனது யோசனையைச் சமர்ப்பித்த பின்னரே ஐக்கிய எதிர்க்கட்சி தனது யோசனையைச் சமர்ப்பிக்கும் என்று கூறி வருகிறது.

இத்தகைய பின்னணியிலேயே ஐ.தே.க. பிரமுகர் கே.என்.சொக்ஸி தமது கட்சியினது யோசனை சம்பந்தமான சில தரவுகளை முன்னோடியாகத் தெரிவித்திருக்கிறார். (அ)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை வேலாயுதபிள்ளை



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை வேலாயுதபிள்ளை (28.04.2007) சனிக்கிழமை மதியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை செல்லமுத்து தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற பத்மாவதியின் கணவரும் காலஞ்சென்ற இராசையா(பிள்ளையார்) மற்றும் அன்னம்மா (லண்டன்), அன்னலட்சுமி(கொழும்பு) காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் அன்னலிங்கம் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி, கனகரத்தினம், சுப்பிரமணியம், இராசையா மற்றும் லீலாராணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு பொற்பதி வீதி கோண்டாவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணியம் சிவராசா
(ராசு - மருமகன்).

பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

## திருமதி மங்கயர்க்கரசி பகவான்



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கயர்க்கரசி பகவான் நேற்று (28.04.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை பகவானின் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - யா/சாவ.இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை-அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் சின்னத்துரை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் அதிசோபனை, டாக்டர் நித்தியானந்தன், சச்சிதானந்தன் (கனடா), வித்தியானந்தன் டேவிட் (ஜேர்மனி), சோதியானந்தன் (GTZ யாழ்ப்பாணம்), ஞானசோபனை (ஆசிரியை- கிளி/ கனகபுரம் ம.வி), விவேகானந்தன் (பொறியியலாளர் - கொழும்பு), மதிசோபனை (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் விக்னராஜா, ரஞ்சிதம் (ஆசிரியை- யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்), விஜி (கனடா), வினோ (ஜேர்மனி), விக்னேஸ்வரி (ஆசிரியை- யா/வயாவிளான் ம.ம.வி), தேவேந்திரன் (வலயக் கல்விப் பணிப்பாளர்- துணுக்காய்), கலைவாணி (சிரேஸ்ட விரிவுரையாளர், வயம்ப பல்கலைக்கழகம்), சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் சோபிகா, மிருணிகா, துங்கீசன், அஜந்தன், ஆதவன், குருபரன் (கனடா), எல்கனான்டேவிட் (ஜேர்மனி), குகப்பிரியா, பவிசன், றேனிதா (கிளிநொச்சி), ஜெனிற்றா, ஜோனதான், ஜினிற்றா (கனடா), கிருத்திகன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற நமசிவாயம், பரமசிவம், சுப்பிரமணியம், பத்மநாதன் மற்றும் மனோன்மணி அம்பலவாணர், மகேஸ்வரி, காலஞ்சென்ற கந்தையா மற்றும் நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கேசவன் மற்றும் திருமதி சி.கமலநாதன் (ஆசிரியை- யா/ மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மட்டுவில் சின்னத்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.பகவான்
(கணவர்- ஒய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி),
பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.


மதுரம் இன்ஸ்ரிரியூட்
பருத்தித்துறை வீதி, 3ஆம் கட்டை, கட்டப்பிராய்
A/L 2009
தமிழ்
யாழின் மிகப் பிரபல ஆசிரியர்
நாக.தமிழிந்திரன்
ஆரம்பம்:
30.04.2007
திங்கள் மாலை 3 மணி
ஏனைய பாடங்களும் நடைபெறுகின்றன.

A/L மாணவர்களுக்கான
அரசியல் கருத்தரங்கத் தொடர்
விரிவுரைகள் :
K.செல்வரட்ணம்
T. திருமுருகன்.
பகுதி I எதிர்பார்க்கை வினாக்களும் விடைகளும்.
ஆரம்பம் :
01.05.2007 காலை 9மணி.
பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

அமைதியான சூழலில்....
எடிசன் அக்கடமி
யாழ்ப்பாணம்
O/L DAY CLASS
பிரிவு I : 7.30-1.30
பிரிவு II : 8.30-2.30
கணிதம்
B.P.பாஸ்கரன்
P.சிவகுமார்
விஞ்ஞானம்
இரா.செல்வவடிவேல்

52 வருட கல்விச் சேவையில்
விக்னா கல்வி நிறுவனம்
இரு இடங்களிலும்
தலைமையகம்: 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கிளை: 417, கே.கே.எஸ். வீதி (யா/இந்து அருகில்)
O/L DAY CLASS 8.30-2.30 வரை
ஆரம்பம் : 30.04.2007 8.30 மணி
* பிரிவு 3 அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
* பிரிவு 4 மிக விரைவில்
* இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டும்
* தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி

பந்தல் விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள 50 அடி நீளமான சொக்கட்டான் பந்தலும், 10' x 15' மேடையும் விற்பனைக்குண்டு
தொடர்பு:
077 9103555

G.A.Q 1st in COMMERCE
யாழ்.பேராதனை
B.Com PART 1
ஆரம்பம்:
05.05.2007
பட்டப் படிப்புகள் கல்லூரி
57/18, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.


## அமரர் மங்கயர்க்கரசி பகவான் அவர்களின் மறைவையொட்டிய கண்ணீர் அஞ்சலி

பொலிவுநிறை நல்வாழ்வு பூத்தொழிர வாழ்வியற்றி
கனிவு நிறை நல்மொழியும் பகன்றனைவரையும் கவர்ந்து
இனிது உபசரணை நல்கி இயலும்வரை பிறர்க்குதவி
பரிவின்றி எமை விடுத்து, பரலோகம் சென்றமையால்
பிரிவதனைத் தாங்காது எம் கண்ணீரஞ்சலி தந்தோம்.

தேனொளி மாதர் மன்றம்.
தென் மட்டுவில்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சுப்பிரமணியம் செல்வராசா



கைதடியில் பிறந்து அரசசேவையில் 29 ஆண்டுகள் பல இன்னல்கள், சோதனைகள் மத்தியில் மிகத்துணிவுடனும் நீதிநியாயங்கள் உள்ளடக்கியவகையில் தனது சேவையை மக்கள்சேவையே மகேசன்சேவையென மதித்து எவரையும் புறந்தள்ளாது உடனுக்குடன் செய்துகொடுத்த பெருந்தகை குறிப்பாக கைதடிவடக்கு முதலாம்வட்டாரத்தில் சேவையாற்றிய காலத்தில் தனது கடமைக்கு மேலாக சிரமம் பாராது எமது குடும்பத்திற்கு ஆற்றிய சேவையை எமது குடும்பம் வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாது.

60ஆம் அகவையில் ஓய்வுபெறும் எமது கிராமஉத்தியோகத்தர் தரம்1 திருவாளர் சுப்பிரமணியம் செல்வராசாவின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் எமது குடும்பம் பெருமை அடைகிறது. தனது ஓய்வுகாலத்தில் நல்லஉடல் நலத்துடன் பல்லாண்டுகாலம் வாழ வேண்டுமென எமது குலதெய்வங்கள் அருள் புரிய வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
விசுவலிங்கம் குடும்பம்(கைதடி வடக்கு),
குணசீலன் குடும்பம் (சுவிஸ்).



யாழில் எங்குமில்லாத
விலையில் P4 கணினிகள்
மற்றும் உதிரிகள்
SPECIAL OFFER
* UPS
* DDR Ram (256, 512) & SDRam
* Processors
* MotherBoards
* Hard Disks
* Floppy Drives
* Printers (Laser, DotMatrix & InkJets)
* Scanners
* Optical Drives (DVDRom, CDRom, Combo, CD-RW & DVD Writter)
* VGA Cards (AGPVGA & PCI express)
* Modems
* MOnitors (Viewsonic & Daewoo)
மற்றும் சகல உதிரிப் பாகங்களும் உத்தரவாதத்துடன்
புதிய P4 கணனியுடன்
Kingston Flash Drive Free
UNIT
347,K.K.S. Road,
Jaffna.
(மனோகரா தியேட்டர் சந்தி)
T.P: 021 4590720


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org